

# கீதாசார்யன்




# கீதாசார்யன்-35

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 3 | துர்மதி ௵ | ஆவணி ௴ | ஆகஸ்டு 81 | பகுதி 11




ஆசிரியர்:

M. A வேங்கடகிருஷ்ணன், M A, M Phil.

**இயக்குநர் குழு:**

T. C. A. ராமாநுஜம்
M.A. B.L., I.R.S. (தலைவர்)

N. கணபதி
விற்பனை இயக்குநர்

R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்

P. T ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

**ஆலோசர் குழு:**

சாண்டில்யன் (தலைவர்)

K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்

Dr. V. V ராமாநுஜம்

S. வேங்கடகிருஷ்ண
பட்டாச்சாரியார்

K. E. B. ரங்கராஜன்.



7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரூ. 12/-

# மதமாற்றம்



தமிழ் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள அரிஜனங்கள் பெருமளவில் முஸ்லிம்களாக மாற்றப்பட்டு வருகின்றனர். இதற்குப் பிரதமமந்திரி முதல் பாமர மனிதன் வரை அனைவரும் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

மத மாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன? அரிசனங்கள் சாதி இந்துக்களால் இழிவாக நடத்தப்படுவதே காரணம் என்று கூறுகின்றனர். இதுமட்டும் காரணமாக இருக்க முடியாது. மதமாற்றத்தினால் மட்டும் இப்பிரச்னைகள் தீரப் போவதில்லை. மேலும் இக்கொடுமைகள் எல்லா மதத்திலுமே தான் இருக்கின்றன. அதிலும் மதம் மாறுபவர்கள் அனைவரும் முஸ்லிமாகவே மாறவேண்டிய அவசியம் என்ன?

அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மட்டுமே இம்மத மாற்றங்கள் பெருமளவில் நடைபெறக் காரணமென்ன? தமிழ்நாட்டில் கடவுள் நம்பிக்கையையும் மதப் பற்றையும் குலைக்கும் வகையில் பிரச்சாரங்களும், இயக்கங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அதற்கு அரசாங்கமும் பலவருடங்களாக மறைமுக ஆதரவு அளித்து வருகிறது. கடவுள் நம்பிக்கையும் மதப்பற்றும் குலைக்கப்படும்போது பொருளாசையினால் மதம்மாறுவது இயற்கை. இந்தியாவிலேயே நாஸ்திகவாதம் அதிகம் பரவியுள்ளது தமிழ்நாட்டில்தான். அதனால்தான் மதமாற்றமும் இங்கு எளிதாகிறது. தும்பை விட்டு வாலைப்பிடிப்பதுபோல அரசாங்கம் இப்போது கவலைப்படுகிறது.

உண்மையில் மதமாற்றத்தைத் தடுக்க வேண்டுமென்றால் ஒவ்வொருவருக்கும் அவரவர் கடவுள் பேரிலும், அவரவர் மதத்தின் பேரிலும் பற்று ஏற்படவேண்டும், அதற்கு அரசாங்கமே உதவ முன் வரவேண்டும். சாதிச்சங்கங்களையும், பிறசாதி எதிர்ப்பு இயக்கங்களையும், நாஸ்திக பிரசாரங்களையும் தடை செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யாவிட்டால் அரசாங்கம் மதமாற்றத்திற்கு கவலை தெரிவிப்பது முதலைக் கண்ணீர்தான்!

# மதமாற்றம் பற்றி மடாதிபதியுடன் பேட்டி



திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனாட்சிபுரம் எனும் கிராமத்தில் வாழும் இந்து அரிசனங்கள் பலர் பெருமளவில் முஸ்லிம்களாக மாற்றப்பட்டு விட்டனர். இதைக் கண்டிக்கும் வகையில் 27-7-81 அன்று இராமநாதபுரத்தில் இந்து ஒற்றுமை எழுச்சி மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட ஸ்ரீமத்பரமஹம்ஸ ஸ்ரீ பெரும்பூதூர் யதீந்த்ரப்ரவண யதிராஜ ஜீயர ஸ்வாமியை கீதாசார்யன் சார்பில் பேட்டி கண்டோம். அவர்கூறிய கருத்துக்கள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன.

**கேள்வி :** யாருடைய அழைப்பின் பேரில் தாங்கள் இராமநாதபுரம் மாநாட்டிற்குச் சென்றீர்கள்?

**பதில் :** மதமாற்றம் பற்றி கேள்விப்பட்டதிலிருந்தே இதைப் பற்றி நான் கவலைகொண்டிருந்தேன். சம்பந்தப் பட்டவர்களைச் சந்தித்துப்பேசி, நம்மால் ஏதாவது செய்ய முடியுமா என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில் 'இந்து மறுமலர்ச்சி'யின் ஆசிரியரும், ஆலயப்பாதுகாப்புக் கமிட்டியின் தலைவருமான மதுரை S. ராமசாமி

அவர்கள் இராமநாதபுரத்தில் ஒரு மாநாடு நடத்தப்படுவதாகவும் அதற்கு அவசியம் வரவேண்டும் என்றும் பிரார்த்தித்தார். அதற்கிசைந்து நானும் சென்றேன் என்னோடு மற்றும் பல ஆதீனத்தலைவர்களும் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

**கேள்வி: அம்மாநாட்டிற்குப் பொது மக்களுடைய ஆதரவு எப்படியிருந்தது? குறிப்பாக, மதம் மாறியவர்கள் அம்மாநாட்டிற்கு வந்திருந்தனரா?**

**பதில்:** பொது மக்களுடைய ஆதரவு மிகவும் நன்றாகவே இருந்தது. ஆயிரக்கணக்கில் இம்மாநாட்டில் பொது மக்கள் கலந்து கொண்டதே இதற்குச் சான்று. செய்தித் தாள்களிலும் இது பற்றி பார்த்திருப்பீர்களே! மதம் மாறியவர்களில் சிலர் இம்மாநாட்டிற்கு வந்திருந்ததாகவும் அவர்கள் மீண்டும் இந்துவாக மாறியதாகவும் கூட அறிந்தேன்.

**கேள்வி: இப்படி முஸ்லிமாக மதம் மாறுவதற்குக் காரணம் என்னவென்று தங்களுக்குத் தோன்றுகிறது?**

**பதில்:** அரிசனங்கள் சாதி இந்துக்களால் கொடுமைப் படுத்தப் படுவதாகவும் அதனால் வெறுப்புற்று மதம் மாறி விட்டதாகவும் கூறப்படுகிறது. இது சரியான காரண மாகத் தோன்றவில்லை. கீழ்த்திசை முஸ்லிம் நாடுகளி லிருந்து பெருமளவில் அந்நியப் பண நடமாட்டம் தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் காணப்படுகிறது. அப் பணத்தாசைக்கு மயங்கியே மதம் மாறியிருக்கின்றனர் என்பதுதான் என் கருத்து.

**கேள்வி: மாநாட்டில் தாங்கள் பேசிய கருத்து என்ன?**

**பதில்:** நமது வைணவஸம்ப்ரதாயப்படி சாதி வித்யாசமே கிடையாது. நாமெல்லோரும் பகவானுடைய தொண்டர்கள் என்ற ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள்.

ஞானத்தை உடையவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவராயினும் அவரை நாம் தொழவேண்டும். நாலாம் வருணத்தவரான நம்மாழ்வார் நமது குருபரம்பரையில் முதலாமவர். ஐந்தாம் வருணத்தவரான திருப்பாணாழ்வாரை லோக சாரங்கர் எனும் அந்தணர் தமது தோளிலே சுமந்து கொண்டு ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதிக்கு வரும்படி எம்பெருமான் ஆணையிட்டான். ஆழ்வார்களிலே பெரும்பாலோர் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களே. அதனால் அவர்களை தாழ்வாய் கருதுவதில்லை. இதை வலியுறுத்திய ஸ்ரீராமானுஜர் தம்முடைய வாழ்க்கையிலும் அநுஷ்டித்துக் காட்டினார். அரிசனங்களை திருக்குலத்தார்களாக்கி ஆலயப்ரவேசம் செய்துவைத்தார். தாம் நீராடச் செல்லும் போது முதலியாண்டானைப் பிடித்துக்கொண்டு செல்லும் உடையவர் நீராடி விட்டு வரும் போது தாழ்குலத்தவரான பிள்ளை உறங்காவில்லிதாசரை பிடித்துக்கொண்டு வருவாராம். இவையனைத்தும் சாதிவித்யாசத்தை உடைக்க ஆன்றோர்கள் காட்டி வழி. ஆனால் இடையில் வந்த சிலர் சாதிவித்யாசங்களைப் புகுத்தி சமுதாயத்தைக் கெடுத்து விட்டார்கள். ஆன்றோர் காட்டிய வழியைப் பின்பற்றி சாதிவித்யாசம் பாராட்டாமல் ஹிந்துக்கள் அனைவரும் ஒற்றுமையாயிருந்தாலே மதமாற்றம் நின்றுவிடும். இது தான் நான் மாநாட்டில் கூறியகருத்து.

**கேள்வி : இந்த மதமாற்றமானது இந்து சமயத்தின் அழிவுக்கே அடிகோலும் என்று அஞ்சப்படுகிறதே?**

**பதில் :** அப்படி நான் நினைக்கவில்லை. இந்து சமயத்தை அழிப்பதற்கு இதை விடப் பெரிய ஆபத்துக்கள் வந்திருக்கின்றன. முகம்மதியர்கள் இந்தியாவை சுமார் 700 ஆண்டுகள் ஆண்டிருக்கின்றனர். அப்போது அவர்கள் செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல பின்னர் ஆண்ட நவாபுகளும் ஆங்கிலேயர்களும் இந்துக்களை மதம் மாற்ற எவ்வளவோ முயன்றனர். அப்போதெல்லாம்

அழியாது இந்து சமயம் இப்போது அழிந்து விடுமென்று நான் கருதவில்லை. ஆனால் அப்போதெல்லாம் நம் முன்னோர்கள் அந்நிய மத ஆதிக்கத்தை எப்படி எதிர்த்தார்களோ அப்படியே இப்போதும் நாமனைவரும் மனவுறுதியுடன் ஒற்றுமையாக இருந்தால் நிச்சயமாக இந்த பயத்தைத் தவிர்க்கலாம்.

**கேள்வி : மதம் மாறியவர்கள் மீண்டும் ஹிந்து மதத்திற்கு திரும்ப நினைத்தால் என்ன செய்ய வேண்டும்? இதற்கு ஏதாவது சடங்குகள் சாத்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றனவா?**

**பதில் :** பொதுவாக ஹிந்து சமயத்திற்கென்று கூற முடியாவிட்டாலும் வைணவ சமயத்தில் இதற்கென்று சில விதி முறைகள் உள்ளன. வைணவ சமயத்தைச் சார விரும்புபவர்கள் ஒரு சிறந்த ஆசாரியனை அடிபணிந்து அவரிடம் திருவிலச்சினையும் (சமாச்ரயணம்) மந்திரோபதேசமும் பெற்றுக் கொண்டால் அப்போதே அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களாகி விடுகிறார்கள். ஸ்ரீராமானுஜர் "பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும் என்று பேசி வரம்பறுத்தார்" என்று மணவாள மாமுனிகளும் அருளிச் செய்துள்ளார். இதைக் கருத்தில் கொண்டு ஸ்ரீவைஷ்ணவ மடாதிபதிகளும், ஆசாரிய புருஷர்களும் ஆசையுடையோர்க்கெல்லாம் திருவிலச்சினை சாற்றி அவர்களை ஸ்ரீவைஷ்ணவர்களாக்கி திருத்திப் பணிகொள்ள வேண்டுமென்பதே என் கோரிக்கை.

**கேள்வி : இது மிக நல்ல யோசனைதான். ஆனாலும் நம்மை வந்து அணுகுபவர்களுக்கு மட்டுமேயல்லவா இது பயன்படும்? மதம் மாறாமல் தடுப்பதற்கு ஏதாவது யோசனை கூற முடியுமா?**

**பதில் :** ஒவ்வொரு அரிசனக் குடியிருப்பிலும் ஒரு கோயிலைக் கட்ட வேண்டும். அவர்களுள் ஒருவரையே அக்-

கோயிலில் பூஜைகள் செய்யச் சொல்ல வேண்டும். எளிய தமிழில் அமைந்துள்ள திவ்யப்பிரபந்தப் பாக்களை அவர்களுக்குப் பயிற்றுவித்து இறையுணர்வை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். இப்படி அவரவர்க்குத் தந்தமது மதத்திலே பற்று ஏற்பட்டு விட்டால் பிறகு எதற்காகவும் மதம் மாற வேண்டும் என்ற எண்ணமே ஏற்படாது.

**கேள்வி : தாங்கள் மாநாட்டில் கலந்து கொண்டதால் ஏதேனும் பயன் ஏற்பட்டுள்ளதா?**

**பதில் :** செய்தித்தாள்களில் மாநாட்டைப் பற்றியும் அதில் நான் கலந்து கொண்டது பற்றியும் வந்துள்ள செய்தியைப் படித்து விட்டு ஆரணியிலிருந்து ஒரு பெண்மணி தான் இந்து மதத்திற்குமாற விரும்புவதாகவும், அதற்குத் தான் செய்யவேண்டியது என்ன என்று கேட்டும் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். நான் அவரை இங்குவந்து குளத்தில் நீராடி, திருவிலச்சினை பெற்று, உடையவரை சேவித்துச் செல்லுமாறு கடிதம் எழுதியிருக்கிறேன். இம்மாதிரி இன்னும் பலர் வரலாம். (பெண்மணி எழுதிய கடிதத்தையும், தாம் எழுதிய பதிலையும் காண்பிக்கிறார்.)

**கேள்வி : நம்மதத்தலைவர்கள் எவ்வளவோ பேர் இருக்கையில் தாங்கள் மட்டும் இம்மாநாட்டில் அழைக்கப்படக் காரணம்?**

**பதில் :** சமுதாயச் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்தருளிய ஸ்ரீராமானுஜர் அவதரித்தருளிய புண்ணிய பூமியில் நானும் பிறந்திருப்பதும், அவரால் நிறுவப்பட்ட மடத்தை வகிக்கும் பாக்கியம் இவ்வெளியவனுக்கு ஏற்பட்டிருப்பதும் காரணமாக இருக்கலாம். மேலும் எனக்கு முன்னால் இப்பட்டத்தை அலங்கரித்தருளிய ஜீயர் ஸ்வாமியும் இம்மாதிரி சமுதாய நோக்கோடு பல பெரிய பணிகளைச் செய்திருக்கிறார். அப்பணி எனக்கும் தொடர்கிறது

பாரத தேசம் முழுவதும் பற்றியெரிந்து கொண்டிருக்கும் மதமாற்றம் பற்றிய பிரச்சனையில் நாம் செய்யக் கூடியது என்ன என்பதை பளிச்சென்று சொல்லியிருக்கிறார் ஸ்ரீஜீயர் ஸ்வாமி.' பழமைவாதிகளின் கண்டிப்புக்கும் புதுமைவாதிகளின் கேலிக்கும் அஞ்சாமல் தம் கருத்துக்களைத் தெளிவாகக் கூறியுள்ள ஸ்ரீஜீயர் ஸ்வாமியை மனமாரப் பாராட்டுகிறோம். இம்மாதிரியே ஒவ்வொருவரும் சிந்தித்து இயங்கினால் இந்து சமயத்திற்கு எந்த ஆபத்தும் வராது என்பது உறுதி.

## மஹானின் பரமபதப்ராப்தி

காஞ்சிபுரியில் தோன்றினவரும் நெடுநாளாகத் திருவல்லிக்கேணியிலும் அதன் ப்ராந்தங்களிலும் வாழ்ந்தவருமான ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் பிள்ளைலோகம் பாஷ்யகாராசாரியர் ஸ்வாமியை அறியாதாரில்லை. பலவிடங்களிலும் உபயவேதாந்த காலக்ஷேபங்களும் உபந்யாஸங்களும் ஸாதித்துக்கொண்டிருந்தவர். இந்த ஸ்வாமி இரண்டொரு மாதம் திருமேனிபாங்கில்லாமலிருந்து நேற்று வைகாசி மாதமுடிவில் திருவல்லிக்கேணியில் திருநாடலங்கரித்தது அத்யந்தசோசநீயம். அவரது குடும்பத்துக்கு நமது அநுதாபத்தை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

# சங்ககாலத் தமிழர் சமயம்

இதுவரை பத்து தலைப்புக்களில் கூறப்பட்ட பரம்பொருளுக்கேயுரிய பெருமைகள் சங்க இலக்கியங்களில் வேறு எந்த தெய்வத்துக்கும் எங்கும் குறிக்கப்படவில்லை என்பதை எவ்வளவு முறை கூறினாலும் மிகையாகாது. நேர்மாறாக, அத்தெய்வங்களுக்குத் தாழ்வுகளே கூறப்பட்டுள்ளன. ஐந்தாம் பரிபாடலில் சிவனும் பார்வதியும் புணர்ந்து வீரியம் வெளிப்பட்டு முருகன் உண்டானதாகக் கூறுகையால், இம்மூன்று தெய்வங்களையும் பரம்பொருளாகச் சங்க காலத் தமிழர் கருதவில்லை என்று தெளிவாக விளங்குகிறது. பரிபாடல் திரட்டிலுள்ள முதற்பாடலில் "பணிவு இல் **சீர்ச் செல்விடைப் பாகன் திரிபுரம் செற்றுழி, கல் உயர் சென்னி இமய வில் நாண் ஆகித் தொல் புகழ் தந்தாரும் தாம்**" [எவர்க்கும் பணியாதவன் என்று பெருமை பெற்ற

**ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் M.A.B L,**
"ஸ்ரீ வைஷ்ணவஸுதர்சனம்" ஆசிரியர்

வனாய், ஓடுவதையே இயல்வாகக்கொண்ட எருதை ஊர் இன்றவனான சிவன் திரிபுரத்தை அழித்தபோது, அவன் தாங்கிய மிகவுயர்ந்த உச்சியையுடைய இமயமலையாகிற வில்லுக்கு நாணாயிருந்து, அத்திரிபுரத்தை வெல்ல உதவி செய்து, 'திரிபுரம் செற்றவன்' என்னும் பழம்புகழை அவனுக்குக் கொடுத்தவனும் ஆதிசேஷனாகிய நீயே] என்று சிவன் திரிபுரம் செற்றதும் ஆதிசேஷனின் உதவியாலேயே என்று கூறியதும் சங்க காலச் சான்றோர்கள் சிவனைப் பரம்பொருளாகக் கருதவில்லை என்று காட்டுகிறது.

சங்கம் வளர்த்த கூடல் எனப்படும் மதுரையை நிலைக்களனாகக்கொண்டு சிவன் பல திருவிளையாடல்களைப் புரிந்த

தாகப் பிற்காலத்தில் எழுந்த கதைகள் எதுவுமே சங்கப் பாடல்களில் காணப்படாததும் இதை வலியுறுத்துகிறது. திருமாலைத் தாழ்த்திக் கூறுகின்றவையாய், பிற்காலத்தில் புனையப்பெற்றவையான அடி முடி தேடிய கதை, கண்ணைப் பிடுங்கி அருச்சனை செய்த கதை, ஸ்ரீமச்சமூர்த்தியை அழித்த கதை, ஆமையின் ஓட்டைப் பிரித்த கதை, வராஹத்தின் கொம்பை ஒடித்த கதை, சரபமாகி நரஸிம்ஹனை அழித்த கதை, திரிவிக்கிரமனின் தோலை உரித்துப்போர்த்துக் கொண்ட கதை முதலான கதைகளில் ஒன்றுகூட சங்ககாலச் சான்றோர்களால் ஆதரிக்கப்படாததிலிருந்து அவர்கள் திருமால் ஒருவனையே பரம்பொருளாகவும், மற்ற தெய்வங்களை அவனால் படைத்தளித்தழிக்கப்பட்டு, அவனுடைய ஆணையை நடத்திச் செல்கின்றவர்களாகவுமே கருதினர் என்று தெளிவாக விளங்குகிறது. ஐந்தாம் பரிபாடலில் சிவனும் பார்வதியும் புணர்ந்து முருகனைப் பெற்றெடுத்தனர் என்று பாடும் கடுவன் இளவெயினனாரே மூன்று நான்காம் பரிபாடல்களில் திருமாலைப் பரம்பொருளாகப் பறைசாற்றியிருப்பது இதை வலியுறுத்துகிறது. கந்தபுராணத்தில் முருகனைப் பிரமன், சிவன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று விரிவாகக் கூறப்பட்ட செய்திகளில் ஒன்றுகூட முருகனைப் பற்றிய சங்ககாலப் பாடல்களுள் ஒன்றிலும் காணப்படாததும் முற்கூறிய விஷயங்களை வலியுறுத்துகிறது.

சங்ககாலப் பாடல்களை ஆராய்ந்தால் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தத்துவங்களும், ஒழுக்கங்களுமே சங்ககாலச் சான்றோர்களால் ஏற்கப்பட்டு வந்தன என விளங்குகிறது. தத்துவங்களைக் குறித்து இதுவரை மிக விரிவாக நிரூபித்துள்ளோம். "**நூலே கரகம் முக்கோல் மணையே ஆயுங்காலை அந்தணர்க்குரிய**" [(1) பூணூல், (2) கரகம் எனப்படும் பாத்திரம், (3)

முக்கோல் எனப்படும் திரிதண்டம். (4) வீற்றிருப்பதற் குரிய மனை என்னும் நான்கும் முற்றும் துறந்த முனிவர்க் குரியவை] என்று தொல்காப்பியர் கூறுவதிலிருந்து பூணூலும், திரிதண்டமும் தரித்த வைஷ்ணவ சந்நியாசிகளே சங்ககாலத்தில் வாழ்ந்து வந்தனர் என்று விளங்குகிறது. கலித்தொகை பாலைக்கலியில் (37) **"உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும் நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக் குறிப்பேவல் செயல்மாலை கொளைநடை அந்தணிர்! வெவ்விடைச் செலன்மாலை ஒழுக்கத்தீர்!"** என்று சங்ககாலத்தில் அந்தணர் எனப்பட்ட சந்நியாசிகள் கரகமும், சிறந்த முக்கோலும் உடையவராய், சிஷ்யர் களோடு யாத்திரையாய்ச் சென்றுகொண்டிருப்பார் களென்றும், அவர்கள் இறைவன் திருவடியன்றி வேறு இன்பங்களைக் கருதாதவர் என்றும் கூறப்பட்டுள்ளது. நெய்தற்கலியில் **"முக்கோல் கொள் அந்தணர் முதுமொழி நினைவார்போல்"** என்று இந்த முக்கோற் பகவர் முதுமொழி யாகிற வேதத்தையே எப்போதும் நினைந்திருந்தனர் எனக் கூறப்பட்டது. **'முக்கோற்பகவர்'** என்று சங்க இலக்கியங் களில் பலவிடங்களில் இவர்கள் குறிக்கப்படுகையாலே, பாகவத தர்மத்தை அநுட்டிக்கும் ஸ்ரீவைஷ்ணவ சந்நியாசி களே இவர்கள் என விளங்குகிறது. பூணூலும், திரிதண்ட மும் இல்லாத சைவ சந்நியாசிகளைப் பற்றியோ, பூணூல் இல்லாமல் ஏகதண்டம் ஏந்திய அத்வைத சந்நியாசிகளைப் பற்றியோ சங்கநூல்களில் எங்கும் குறிப்பு காணப்பட வில்லை. விசிஷ்டாத்வைதிகள் ஒப்புக்கொள்ளும் இருபத் தைந்து தத்துவங்களையும் மூன்றும் பரிபாடலில் படித்தது போல், சிவன் சக்தி முருகன் ஆகியவர்களைப் பற்றிய பாடல் களில் சைவ சித்தாந்திகள் ஒப்புக்கொள்ளும் முப்பத்தாறு தத்துவங்கள் காட்டப்படவில்லை. 'உலகம் பொய்; குணமற்ற அறிவொன்றே மெய்' என்னும் அத்வைதக் கொள்கைகள் சங்கப் பாடல்களில் எங்குமே ஆதரிக்கப் படவில்லை. "அனைத்தும் நீ அனைத்தினுட்பொருளும் நீ

என்று 'திருமால் அனைத்தையும் வியாபித்திருக்கையால் எல்லாமே யாகிறான்' என்னும் விசிஷ்டாத்வைதக் கொள்கையே சங்ககாலத் தமிழர்களால் ஆதரிக்கப்பட்டது. மற்றும் பற்பல விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவ மதக் கொள்கைகள் சங்கப் பாடல்களில் ஆதரிக்கப்பட்டிருப்பதை முன்னமே காட்டினோம். இவற்றிலிருந்து ஆழ்வார்களையும், ஸ்ரீராமாநுஜர் முதலான ஆசார்யர்களையும்போல சங்க காலத் தமிழர்களும் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தையே வேதம் காட்டிய மதமாக அறுதியிட்டுப் பின் பற்றி நின்றவர்கள் என்று கையிலங்கு கனியாகவும், வெள்ளிடைமலையாகவும் விளங்குகிறது.

(முற்றும்)

Anything & Everything in
Real Estates
( Buying & Selling Properties )
Civil Constructions
Please Contact

MINERVA ENTERPRISES

2, Narayanan Street,
Mahalingapuram,
Nungambakkam MADRS-600 034.

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 13. பிள்ளை உலகாசிரியர்.

நம் கதை நிகழும் காலத்தில் பிள்ளை உலகாசிரியர் தமது அறுபதாவது பிராயத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்.

வைணவம் தழைக்க அருந்தொண்டுகள் புரிந்த அவர் அந்த சமயத்தை நிலை நிறுத்துவதற்காகப் பதினெட்டு ரகசியங்கள் என்னும் நூலை வடித்துள்ளார். அவற்றுள் சூத்திரங்களாக உள்ள ஸ்ரீ வசன பூஷணம் என்னும் நூல் மிகவும் பிரசித்தி பெற்றது. இந்நூலுக்கு பலரும் வியாக்கியானங்கள் எழுதியுள்ளார்கள். இந்நாளிலும் எழுதி வருகிறார்கள்.

சமீபத்தில் இந்நூல் ஒரு அமெரிக்கரால் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

இத்தகைய புகழ் பெற்ற உலகாசிரியர் இல்லறம் ஏற்றுக் கொள்ளாது கடைசி வரை பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து வந்தார்.

வாழ்க்கையில் பலவித மேடு பள்ளங்களைக் கண்ட அவர், தம் முதிய பருவத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த பல குழப்பங்களையும் தாங்க வேண்டி வந்தன.

கதை நிகழும் வேளையில் பலவீனத்தாலும் தளர்ச்சியாலும் உடல் நலம் குன்றியிருந்த அவர், அன்றைய நாள் காலையில் மயக்கம் அடைந்திருந்தார்.

அவரது சீடர்களும், இதர பரிவாரங்களும் அவரைக் கவலையோடு சூழ்ந்து கொண்டு மௌனமாகக் கண்ணீர் வடித்து நின்றார்கள்.

பின்னர் அவர்களில் பலர் வெளியே வந்து ஆலோசனை நடத்தினார்கள்.

ஆற்றின் கரையோரத்தில் இருப்பதாலும், பல வழிகள் கூடும் இடத்தில் இருப்பதாலும் அந்தப் பிரதேசத்தில் இனித் தங்கியிருப்பது சரியல்ல என்று தீர்மானித்தார்கள்.

ஆகவே உலகாசிரியரை டோலாவில் படுக்க வைத்து மிக மெதுவாக அதை எழுந்தருளிக் கொண்டு போக வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

அதன்படி வெகு சீக்கிரமே ஊர்வலத்தைக் கிளப்பினார்கள்.

மறுநாள் காலையில் ஒரு சோலையில் தண்டு இறங்கி இருந்தபோது ஆசிரியருக்கு நினைவு வந்தது. ஒரு நாழி கையில் மெதுவாகப் பேச ஆரம்பித்தார். அப்போது மிகவும் பிடித்தமான சீடர் விளாஞ்சோலைப் பிள்ளை* என்பார் ஆசிரியர் முன்னால் நின்று சிறிது நேரம் கண்ணீர் உகுத்துக் குலுங்கி அழுதார்.

*(பிள்ளை உலகாசிரியர் ஒரு அந்தணர். அவருக்கு மிகப்பிரியமான சீடரான விளாஞ்சோலைப் பிள்ளை என்பார் அரிசனர்.)

அவரைக் குளிர நோக்கிய பிள்ளை உலகாசிரியர் "பிள்ளாய், அழுகிறபடி என்?" என்று கேட்டார்.

"சுவாமி! சுவர்க்க பூமி போன்ற திருவரங்கம் பாழ்பட்டுக் கிடக்க, தாங்கள் இப்படி ஒரு காட்டில் வந்து நோவு

சாத்திக் கொண்டீர்களே! இதெல்லாம் லீலையா, அல்லது விதியா, அடியோங்கள் அறிந்தோமில்லையே!'' என்று கூறினார்.

உடனே உலகாசிரியரும், ''பிள்ளாய்! பக்தனாக இருந்தால் யாவற்றையும் லீலையாகக் கொள்வதன்றோ உத்தமமானது? அப்படி நோக்கினால்தானே நமது துயரங்களோ துக்கங்களோ இலகுவாக காற்றில் பறந்து போகின்றன. நம் பெருமான் திருவரங்கர் இத்தனை நாளும் அரங்கத்திலேயே இருந்து வந்தார். இன்று நாட்டைச் சுற்றிப் பார்க்க உலா போகிறார். இது திருவரங்கன் உலா! இந்த அற்புதமான உலாவில் நாமெல்லாரும் பங்கெடுத்திருக்கிறோம். இது நமது பாக்கியம். இதை பகவானது லீலையாகக் கொள்ள வேண்டுமே அன்றி, வேறு எதுவும் கொள்ளக் கூடாது'' என்று கூறினார்.

அவர் திருவாய் மலர்ந்து கூறியதை எல்லாம் சீடர் மனத்தில் ஆழமாகத் தேக்கிக் கொள்ள, நாலூர்ப் பிள்ளை என்பார் உடனே, ''சுவாமி! இப்படிச் சோதனை ஏற்பட்டுக் காடுகளில் உலாவும் வேளையில் பகவான் மீதுள்ள வாஞ்சை எம் போன்றோருக்குக் குறைய வழியில்லையோ!'' என்று கேட்டார்.

உடனே ஆசிரியரும், ''பிள்ளாய்! கேவல நாஸ்திகனைத் திருத்தலாம். ஆஸ்திக நாஸ்திகனை ஒரு நாளும் திருத்த ஒண்ணாது. *பகவான் மீது பாரத்தைப் போட்டுச் சரணாகதி அடைந்தவர்களுக்கு, எந்தத் துயரமும் ஒரு பொருட்டாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அவர்கள் தான் ஆஸ்திக நாஸ்திகர் ஆவார்! அப்படி இருப்பதைவிட அவர்கள் நாஸ்திகராக இருப்பதே மேல்!'' என்று கூறினார்.

*உலகாசிரியரே ஸ்ரீவசன பூஷணத்தில் அருளியுள்ள இரு வாக்கியங்கள் இவை.

மறுநாள் காலையில் ஊர்வலம் காட்டுக்குள் புகுந்து மெதுவாகச் செல்லும் வேளையில் முப்பது நாற்பது கள்வர்கள் கும்பலாக வந்து ஊர்வலத்தைச் சூழ்ந்து கொண்டார்கள்.

பரிவாரங்களின் மூட்டை முடிச்சுகளில் வெறும் புஞ்சைத் தானியங்களே இருப்பதையும், பல்லக்கில் திருவரங்கன் இருப்பதையும் கண்டு திடுக்கிட்ட கள்வர் தலைவன் ஊர்வலத்தாரிடம் விசாரணை நடத்த, சீக்கிரமே அவனுக்கு எல்லா விருத்தாந்தங்களும் தெரியவந்தன.

திருவரங்கப் பெருமானுக்கு இப்படி ஒரு கதி நேர்ந்ததே என்று எண்ணி வருந்திய அவன், தன் சகாக்கள் கொண்டு வந்துள்ள பொதிகளைத் திறந்து, நிறைய காசுகளையும், நகைகளையும் வாரி எடுத்து ஒரு பெரிய தட்டத்தில் இட்டு அவற்றை உலகாசிரியர் முன் காணிக்கையாக நீட்டினான்.

உலகாசிரியர் அதை வாங்க மறுத்தார்.

கள்வர் தலைவன் பலமுறை கெஞ்சிப் பார்த்தும் உலகாசிரியர் அவற்றை ஏற்றுக் கொள்ள சம்மதிக்கவில்லை.

அப்போது கள்வர் தலைவன், ''சுவாமி! பரிவாரங்களின் வழிநடைச் செலவுக்குக் கூட தங்களிடம் ஏதும் இல்லையே! ஆகவே இவற்றை ஏற்கலாகாதோ?'' என்று மீண்டும் தழைந்துக் கூற, உலகாசிரியர், ''அப்பா! பட்டினி கிடந்து இறந்தாலும் இறப்போமே அன்றி இந்தச் சொத்துக்களைத் தொடமாட்டோம்'' என்று கூறினார்.

கள்வர் தலைவர் வாழ்க்கையில் பட்ட முதல் அடி அது.

''அப்பா, உன் சொத்துக்களைச் சேர்! அப்போது வாங்கிக் கொள்கிறோம்!'' என்று கூறி விட்டு ஊர்வலத்தாரை நகரும்படி கட்டளையிட்டார் உலகாசிரியர்.

ஆசிரியரின் டோலா மேலே எழுந்தபோது, கள்வர் தலைவன் ஓடி வந்து, "சுவாமி! இவை என் சொத்துக்கள் இல்லாவிட்டால் வேறு எங்கேதான் இருக்கின்றன?" என்று கேட்க, "உன் நாவில் இருக்கிறதப்பா அது! ரங்க ரங்கா என்று சொல்லிக் கொண்டே இரு! சொத்துக்கள் சேர்ந்து கொண்டே வரும்!" என்று மறுமொழி கூறிய உலகாசிரியர் அவனுக்கு இரு துளவங்களைக் கொடுத்து விட்டு ஊர்வலத்தை மேலே போகச் சொன்னார்.

அன்றும் அதற்கு மறுநாளும் ஊர்வலத்தார் இடையறாது பிரயாணம் செய்தார்கள். மூன்றும் நாளில் உலகாசிரியரின் உடல்நிலை மோசமாயிற்று. இனியும் காட்டு மார்க்கத்தில் போவது சரியல்ல என்று உணர்ந்த ஊர்வலத்தார் அருகில் தென்பட்ட ஜோதிஷ்குடி என்ற ஊரைத் தேர்ந்தெடுத்து அதன் சோலைக்குள் தங்கினார்கள்.

உலகாசிரியருக்கு நினைவு அடிக்கடி மங்கியது. அவர்களது சீடர்களான விளாஞ்சோலைப் பிள்ளை, கூரகுலோத்தம தாச நாயனார், திருக்கண்ணங்குடிப் பிள்ளை, திருப்புட்குழி ஜீயர், நாலூர்ப் பிள்ளை ஆகியோர் கவலையுடன் அவர் பக்கலிலேயே இருந்தார்கள்.

அன்று மாலையில் ஆசிரியர் தம் கண்களை மெள்ளத் திறந்தார்.

தமது சீடர்களை குளிர நோக்கி, "நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள். 'ஓயும் மூப்பு பிறப்பு இறப்புப் பிணிவீயுமாறு செய்வான் திருவேங்கடத்து ஆயன்!' என்று திருவாய்மொழியில் கண்டிருக்கவில்லையோ! 'திருவேங்கடத்தானே! புகல் ஒன்றில்லா அடியேன்,' 'இக்கரை ஏறி இளைத்திருந்தேன்,' 'இனி நான் போகலொட்டேன்,' என்று பகவானைத் தடுத்தும் வளைத்தும் நிறுத்தியல்லவா நம் ஆழ்வார்கள் பாடியுள்ளார்கள்? அவ்விதம் பகவானை அணைத்து நிறுத்தி

அவனேயே சரணடைந்த பிறகு நமக்குக் கவலை இருக்க லாமோ?'' என்று கேட்டார்.

பின்னர் அவர்களுக்குப் பல வித உபதேசங்களை அருளி அவரவர் வாழ வேண்டிய நெறி முறைகளையும் கூறினர்.

ஒரு நாழிகைக்குப் பிறகு அவர் மௌனமானார். பார்வை மூடிக் கொண்டே வந்தது. அவரது திருநாவு புரண்டு த்வய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே வர, பிறகு அரை நாழிகையில் பிள்ளை உலகாசிரியர் திரு நாட்டுக்கு எழுந்தருளினர்.

அன்றைய தினம் ஆனி மாதம் வளர்பிறையில் பன்னி ரண்டாம் நாள் ஆகும்.

அவர் மறைவைக் கண்டு சீடர்களும் பெரியவர்களும் வேரற்ற மரம் போல் சாய்ந்து, பேச்சு மூச்சற்று வெகு நேரம் கிடந்தார்கள். பிறகு, எல்லோரும் தேறி எழுந்து உலகாசிரியரின் திருமேனிக்கு அரங்கனின் திருமாலை, திருப் பரிவட்டங்களை எல்லாம் சாத்தி விதிமுறைகள், பிறழாமல் கிரியைகளை எல்லாம் செய்து முடித்தார்கள்.

இவ்விதம் ஊர்வலத்தில் நடுச் சோதியாகத் திகழ்ந்த பேரொளி அணைந்து போயிற்று. (தொடரும்)

---

# ஆண்டு மலருக்குப் பதிவு செய்துவிட்டீர்களா?

---

# இராமனா? கண்ணனா?

**தாத்தா :** வாருங்கள் குழந்தைகளே? என்ன எல்லோரும் இங்கு வந்து விட்டீர்கள். இன்று நீங்கள் 'ஸ்ரீஜயந்தி' கொண்டாடப் போவதில்லையா?

**நாராயணன் :** நீங்கள் எங்களுக்கு ஒரு கதை சொன்னால்தான் நாங்கள் போவோம்.

**தாத்தா :** சரி. கதை சொல்வதற்கு முன் உங்களை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். யார் சரியாகப் பதில் சொல்கிறீர்கள் என்று பார்ப்போம்.

**ஸ்ரீதேவி :** கேளுங்கள் தாத்தா.

**தாத்தா :** திருமாலின் பல அவதாரங்களிலே மிக முக்கியமானவை பத்து அவதாரங்கள். அந்த பத்து அவதாரங்களிலே முக்கியமானவை கிருஷ்ணாவதாரமும், இராமாவதாரமும் தான். அதிலே கண்ணன் உசத்தியா? ராமன் உசத்தியா? என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

---

**பூமிகா**

---

**நாராயணன் :** இருவருமே உசத்தி தான்.

**ஸ்ரீதேவி :** இராமாவதாரம் தான்.

**கண்ணன் :** ஊகூம்! கிருஷ்ணாவதாரம் தான் உசத்தி.

**தாத்தா :** கிருஷ்ணாவதாரம் தான் உசத்தி என்கிறாயே! அதற்குக் காரணம் சொல்ல முடியுமா?

**கண்ணன் :** அது வந்து— என் பெயர் கண்ணன் தானே தாத்தா. அதனால்தான் கிருஷ்ணாவதாரம் உசத்தி என்று சொன்னேன்.

**தாத்தா :** தவறு கண்ணு! அப்படிச் சொல்லக் கூடாது. நாம் எப்பொழுதும் பகவானையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு பகவானின் பெயர்களையே வைக்கிறார்கள். அதற்காக 'நாமே தெய்வம்' என்று கர்வம் கொள்ளக் கூடாது.

**ஸ்ரீதேவி :** என்ன தாத்தா ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இன்று நாங்கள் 'கிருஷ்ண ஜயந்தி' கொண்டாட வேண்டாமா? சீக்கிரம் எங்களுக்குக் கதை சொல்லுங்கள் தாத்தா.

**தாத்தா :** இரு அவசப்படாதே. அந்த மாதிரி செருக்குக் கொண்ட ஒருவனின் கதையைக் கூறுகிறேன். 'பௌண்ட்ரக வாசுதேவன்' என்றொரு அரசன் இருந்தான். பல மூடர்கள் அவனை 'நீ தான் வாசுதேவன்' என எப்போதும் புகழ்ந்து கொண்டேயிருந்தனர். இதனால் அறிவு மயங்கிய அவன் 'நான்தான் வாசுதேவன்' எனக் கூறிக் கொண்டான்.

**நாராயணன் :** வசுதேவன் மகனை கண்ணன் தானே வாசுதேவன். பௌண்டரகன் தன்னை வாசுதேவன் என்று கூறிக் கொள்வது தப்பில்லையா தாத்தா?

**தாத்தா :** பௌண்டரகன் அப்படிச் சொன்னது மட்டுமில்லை, தானே சங்கு சக்கரங்களைச் செய்து, அதை அணிந்து கொண்டு, தன்னுடைய தூதனை அழைத்து 'வாசுதேவனாகிய நான் இங்கிருக்கும் போது, இன்று முதல் நீ சங்கு சக்கரங்களை அணியக் கூடாது. அப்படி இல்லையேல் என்னுடன் போராடி வென்றாயானால் அதைத் தரிக்கலாம்' என்று கண்ணனிடம் போய்க் கூறு, எனக் கட்டளையிட்டான்.

**ஸ்ரீதேவி :** கண்ணனிடமே சவாலா? விந்தையாயிருக்கிறதே. கண்ணன் எங்கே? இவன் எங்கே?

**தாத்தா :** மீதியைக் கேள். அவன் சொன்னதை அப்படியே தூதன் கண்ணனிடம் வந்து கூறினான். இதனால் கோபங் கொண்ட கண்ணன் யுத்தத்திற்குப் புறப்பட்டு அவன் தலையைத் தன் சக்ராயுதத்தால் துணித்தான். இப்போது புரிந்ததா கண்ணா?

**கண்ணன் :** நன்றாகப் புரிகிறது தாத்தா. நான் இனிமேல் அவ்வாறு செருக்குக் கொள்ளவே மாட்டேன். இந்தச் சக்ராயுதத்தால் தானே கிருஷ்ணர் சிசுபாலன், சிமாலிகன் போன்றவர்களையும் அழித்தார்.

**தாத்தா :** ஆம்! நரகாசுரனையும் இந்தச் சக்ராயுதத்தால் தான் அழித்தான்.

**நாராயணன் :** அப்படியா! அந்தக் கதையைச் சொல்லுங்கள் தாத்தா.

**தாத்தா :** ம்! ப்ராக்சோதிஷமென்னும் பட்டணத்திலே, பூமிதேவியின் மகன்—அரக்கன்—நரகாசுரன் பல பல கொடுமைகள் செய்து வந்தான். அவன் செய்து வந்த கொடுமைகளுக்கு ஓர் அளவே இல்லாமல் இருந்தது.

**ஸ்ரீதேவி :** அப்படி என்ன கொடுமைகள் செய்து வந்தான் தாத்தா?

**தாத்தா :** அதாவது, சகல வாயில்லாப் பிராணிகளுக்கும், தேவர், சித்தர், போன்றவர்களுக்குந் தொல்லை கொடுத்துக் கொண்டும், கன்னிகைகளை இழுத்துச் சென்று சிறையில் அடைத்தும், வருண பகவானின் குடையைப் பிடுங்கிக் கொண்டும் இவ்வாறு பல கொடுமைகளை செய்து வந்தான். இதனால் மக்கள் மிகவும் துன்பமடைந்தனர்.

**கண்ணன்:** அச்சச்சோ! அப்புறம் என்ன ஆச்சு தாத்தா?

**தாத்தா:** அவன் கொடுமைகளைப் பொறுக்க முடியாததால், இந்திரன் கண்ணனிடம் வந்து முறையிட்டான். உடனே கண்ணனும் பெரிய திருவடியான கருடன் மேலேறி, ப்ராக்சோதிஷபுரத்திற்குச் சென்றான். ஆனால் அந்தப் பட்டணத்தைச் சுற்றி நரகாசுரனுடைய மந்திரிகளான முரன், அயக்ரீவன், பஞ்சசனன் போன்ற பல பேர் சேனைகளோடு நின்று கொண்டிருந்தனர். அவர்களுடன் போராடி அவர்களை அக்கினி சுவாலையில் அழித்து விட்டு, ப்ராக்சோதிஷ புரத்திற்குள் நுழைந்தான். அங்கே நரகாசுரன் பல படைகளோடு நின்று கொண்டிருந்தான். ஆனால் கண்ணன் அஞ்சாமல் போரிட்டான். நரகாசுரன் அநேக சஸ்திரங்களை பிரயோகிக்க, கண்ணனும் தன்னுடைய சக்ராயுதத்தால் அவைகளைத் தடுத்து, கடைசியில் அந்தச் சக்கராயுதத்தாலேயே அவனைக் கொன்றான்.

**ஸ்ரீதேவி:** அந்த நாள் தானே தீபாவளியாக கொண்டாடப் படுகிறது தாத்தா!

**தாத்தா:** ஆம்! நரகாசுரன் தான் இறப்பதற்கு முன்னால் கண்ணனிடம் வேண்டிக் கொண்டபடி அந்த நாள் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது.

**நாராயணன்:** ஒரு சந்தேகம் தாத்தா! பல அசுரர்களின் உயிரை அழித்திருக்கும் இந்தச் சக்ராயுதம் யாரையேனும் காப்பாற்றி இருக்கிறதா தாத்தா!

**ஸ்ரீதேவி:** ஏன் இல்லை? ஒரு கஜேந்திரனின் (யானை) உயிரைக் காப்பாற்றி இருக்கிறதே.

**நாராயணன்:** நான் கேட்பது கிருஷ்ணாவதாரத்தில்.

**தாத்தா:** அர்ச்சுனனுடைய உயிரைக் காப்பாற்றியிருக்கிறது. அந்தக் கதையைச் சொல்கிறேன். மஹாபாரத யுத்தத்தின் பதின்மூன்றாம் நாள் அர்ச்சுனனுடைய மகன் அபிமன்யுவை, துரியோதனனுடைய தங்கையின் கணவனான ஜயத்ரதன் என்பவன் கொன்று விட்டான். கோபங் கொண்ட அர்ச்சுனன், 'நாளை சூரியன் மறைவதற்குள் ஜயத்ரதனைக் கொல்லாவிடில், நான் அக்னிப்பிரவேசம் செய்து உயிர் துறப்பேன்' என்று சபதம் செய்தான். இதையறிந்த பகைவர்கள் ஜயத்ரதனை வெளியே விடாமல் மறைத்து வைத்திருந்தனர். சூரியாஸ்தமன சமயமும் நெருங்கிவிட்டது. ஆனால் ஜயத்ரதன் அர்ச்சுனன் கண்ணில் அகப்படவில்லை.

**கண்ணன்:** அப்படியானால் அர்ச்சுனன் ஜயத்ரதனைக் கொல்லவில்லையா? அர்ச்சுனன் அக்னிப்ரவேசம் செய்து விட்டானா? கண்ணன் அர்ச்சுனனுக்கு உதவியிருக்கலாமே தாத்தா.

**தாத்தா:** அவசரப்படாதே. மீதியைக் கேள். அர்ச்சுனனைக் காப்பாற்ற வேண்டி கண்ணன், சூரியன் அஸ்தமிப்பதற்குச் சில நாழிகை முன்னர் தன் சக்ராயுதத்தால் சூரியனை மறைத்து விட்டான். அதனால் உலகம் இருண்டது. உடனே அர்ச்சுனன் சூரியாஸ்தமனமாகி விட்டது என்று நினைத்து அக்னிப்பிரவேசம் செய்யத் தொடங்கினான். அதனைக் காண ஜயத்ரதன், துரியோதனன் முதலான பலருடனே வந்து நின்றான். உடனே கண்ணன் சக்ராயுதத்தை எடுத்ததால் வெளிச்சம் ஏற்பட்டது. அர்ச்சுனனும் உண்மையில் இன்னும் அஸ்தமிக்கவில்லை என்று புரிந்து கொண்டு ஜயத்ரதனைக் கொன்றான். பார்த்தீர்களா? கண்ணனுடைய சக்ராயுதத்தால்தானே அர்ச்சுனன் பிழைத்தான். சக்ராயுதம் நல்லவர்களைக் காப்பாற்றவும், துஷ்டர்களை ஒழிக்கவும் தான் இருக்கிறது.

**நாராயணன்:** ஒரு சின்ன சந்தேகம் தாத்தா. பகவானுடைய சக்ராயுதம் சூரியனைப் போல ஆயிரம் மடங்கு ஒளி பொருந்தியது என்று சொல்வார்களே! அப்படிப் பட்ட சக்ராயுதத்தால் சூரியனை மறைத்தால், உலகம் இரண்டு விடுமோ? இன்னும் பிரகாசமாகத் தானே இருக்கும்.

**தாத்தா:** நல்ல கேள்வி கேட்டாய். ஒரு சூரியனைப் பார்ப்பதற்கே நமக்குக் கண் கூசுகிறது. மேலும் வெயிலில், வெளியே சென்று விட்டு நம் வீட்டிற்குள் வரும் போது எங்கும் இருட்டாகவே இருக்கிறது அல்லவா? ஒரு சூரியனுக்கே இப்படித் தோன்றும் உலகம், ஆயிரம் சூரியர்கள் தோன்றினால் எப்படி இருக்கும்? எனவே உலகம் இருண்டு விட்டது.

**கண்ணன்:** மிகவும் சரியான சமாதானம் தாத்தா. ஆமாம்! இராமவதாரம், கிருஷ்ணவதாரம் இரண்டில் எது உசத்தி என்று நீங்கள் சொல்லவே இல்லையே. காரணத்தோடு சொல்லுங்கள் தாத்தா.

**தாத்தா:** இப்போது நாழியாகி விட்டபடியால் பிறகு சொல்கிறேன். முதலில் நீங்கள் எல்லோரும் 'ஸ்ரீஜயந்தி' கொண்டாடி விட்டு வாருங்கள்.

(அடுத்த இதழில்)

---


## கீதாசார்யன் சந்தாவிவரம்

**ஆயுள் சந்தா ரூ. 100**

**வருடச் சந்தா ரூ. 12**

## காவளம் பாடி

கண்ணா! தேவகுலத்தில் தோன்றினாலும் நீதான் அரசன். மனிதகுலத்தில் தோன்றினாலும் நீதான் அரசன்; நீயே பேரரசன்; ராஜாதி ராஜன்! அரசகுலத்தில் பிறந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஆளும் தகுதியை நீயே அளிக்கிறாய்! இராமனாகப் பிறந்த போது உனக்குச் சக்கரவர்த்தித் திருமகன் என்று திருநாமம். கண்ணனாகப் பிறந்து மாடு கன்றுகளை மேய்க்கும் பணியை மேற்கொண்டாய்; கோபாலன் என்று பெயர் பெற்றாய்! கோபாலர்களிலும் நீதான் அரசன் உன்னைப் போல பிறரால் மாடு மேய்க்க முடியுமா? அவற்றைக் காப்பாற்ற முடியுமா? ஆதலால், ராஜகோபாலன் என்று பெயர் பெற்றாய்! அன்று கையில் கோல் கொண்டு பசுக்களைக் காப்பாற்றினாய்! இன்று யாம் ஒன்று மறிவொன்று மில்லாத

# ஸ்தலசயனத்துறைவார்

வர்கள்; உன்னைத் தவிர வேறு எவரையும் மனத்தாலும் நினையாதவர்கள்; பசுவைப் போன்றவர்கள்; எங்களைக் காப்பதற்காகக் காவளம் பாடியில் எழுந்தருளி இருக்கிறாய்! நீ எதனைக் கையில் கொண்டிருந்தாலும் நீயே ரக்ஷகன் என்று காட்டி விடுகிறதே! கையில் சக்கரம் இருந்தாலும் நீயே ரக்ஷகன் என்பதைக் காட்டுகிறது. நீ எந்த வேடத்தை அணிந்து கொண்டாலென்ன! வில்லும் நீ உலகநாதன் என்பதை உணர்த்துகிறது! ஆநிரை மேய்க்கும் கோலும் உன்னை அமரர்கள் அதிபதி என்பதைக் காட்டுகிறது.

மாடு மேய்க்கும் கண்ணனாக உன்னைக் காண ஆண்டாள் ஆசைப்பட்டாள். அப்படியே (விருந்தாவனத்தில் மாடுகளை மேய்ப்பது போல்) காட்சியளித்தாய்! விருந்தாவனத்தே

கண்டோமே' என்று பலர் சொல்வதுபோல் தானே சொல்லி அநுபவிக்கிறான். அப்படிப்பட்ட காட்சி பிற்பட்ட காலத்தவர்க்கு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே வாத்ஸல்ய குணத்தைக் காட்டிக் கொண்டு இங்கு எழுந்தருளி இருக்கிறாயோ!

காவளம்பாடி எம்பெருமான் திருநாமம் ராஜகோபாலன். மன்னார்குடியில் எழுந்தருளி இருப்பதுபோல் நின்ற திருக்கோலம். சிவனுக்கும் மற்ற தேவர்களுக்கும் காட்சியளிக்கத் தோன்றினான். இவனும் அத்தத்தின் பத்தாம் நாள் (ரோகிணியில்) தோன்றியவன்.

ஏனோ இந்த இளகிய மனம்: எம்பெருமானின் மனம் மிகவும் மென்மையானது என்று எல்லோருமே கூறுகிறார்கள். ஒவ்வொருவனும் பிழைப்பதற்காக (நல்வழியில் செல்வதற்காக) எம்பெருமான் பல நெறிகளை உணர்த்தி இருக்கிறான். எந்த நல்வழியிலும் செல்லாமல் தவறான வழியில் திரிந்துழலும் மூர்க்கனைக் கண்டு அவனும் வருந்துகிறான். அவனைத் தண்டிக்க விரும்புகிறான் பகவான். ஆனால் தவறான வழியில் சென்று துன்புறும் அந்த மூர்க்கனும் பல நாட்களுக்குப் பிறகு நல்லறிவு பெற்று எம்பெருமானிடம் செல்கிறான். அவனெதிரில் நின்று 'நம:' என்று கூறிக் கொண்டு அஞ்சலி செய்கிறான். உடனே பகவானின் மனம் இளகிப் போய் விடுகிறது; எதிரில் நிற்பவன் மீது பாசம் ஏற்படுகிறது. இவனைக் காப்பாற்றியே தீரவேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான் என்று பெரியோர் கூறுவர்.

கண்ணா! உன் மனநிலையை ஸத்யபாமை நன்கு உணர்ந்தவள்! தக்க நேரத்தில் உன்மனத்தின் மென்மையை உலகினுக்கு வெளியிட்டு விட்டாள். நீ ஒரு சமயம் உன் அன்பிற்கு உரிய ஸத்யபாமை துணை கொண்டு நரகாசுரனோடு போர் செய்யச் சென்றாய்! போரிட்டு அவனைக் கொன்றாய்!

அவன் அபகரித்திருந்த குண்டலங்களை மீட்டு அதிதிதேவி யிடம் (இந்திரனின் தாய்) கொடுக்க ஸத்யபாமையோடு சுவர்க்கத்திற்குச் சென்றாய்! அப்போது இந்திரன் தன் மனைவி யோடு உன்னை வரவேற்க வந்தான். இந்திராணி தலையில் அணிந்திருந்த பாரிஜாத மலர் ஸத்யபாமையின் பார்வையில் பட்டு விட்டது

ஸத்யபாமை அம்மலரைப் பெரிதும் விரும்பினாள். இந்தி ராணியைக் கேட்டாள்' கேட்டும் பயனில்லை! இது தேவர் களுக்கே உரியது; மானிடர்க்குத் தகாது' என்றும் இந்திராணி கூறி விட்டாள். ஸத்யபாமையின் முகத்தில் தோலவிக்குறி! முகம் வாடியது; கண் சிவந்தது! பாரிஜாத மலரைப் பெற்றே தீர்வது என்று முடிவு செய்தாள். உன்னிடம் தெரிவித்தாள். ஸத்யபாமையின் அன்பிற்குக் கட்டுப்பட்டவன் நீ! அவள் நிலையைக் கண்டதும் மனம் இளகியது. பாரிஜாத மரத்தைக் கருடன் மீது ஏற்றித் துவாரகைக்குக் கொண்டு வந்தாய்; ஸத்யபாமையின் நிலா முற்றத்தில் நட்டு விட்டாய்.

அன்பிற்குக் கட்டுப்பட்டு செய்த இந்த வரலாற்றை நினைவூட்டிக் காவளம்பாடிக் கண்ணனை ஸேவிக்கும் போது அவன் அகமும் முகமும் மலர்ந்து அருள்புரிகிறான்.

ஏவிளங் கன்னிக்காகி இமையவர்கோனைச் செற்று
காவளம் கடிதிறுத்துக் கற்பகம் கொண்டு போந்தாய்!
பூவளம் பொழில்கள் சூழ்ந்த புரந்தரன் செய்த நாங்கை
காவளம் பாடிமேய கண்ணனே களை கணீயே!

(பெரிய திருமொழி 4-6-8)

ஒருவனுக்கு பகவானின் திருவருளால் நன்கு பேசும் திறனும் பாடும் திறனும் வந்து விட்டன! எல்லோரும் அவனைப் புகழத் தொடங்கினர் அவனது சொல்லில் ஒரு சக்தி ஏற்பட்டது. வள்ளல்களும் அரசர்களும் அவனிடம் பாடலைப்

பெறவிரும்பினார்கள். நாளடைவில் தனக்குச் சொற்றிறன் பகவானால் அருளப்பட்டது என்பதையே அவன் மறந்து விட்டான். மனிதர்களையே பாடுவான்; ஆடையணிகள் செல்வம் முதலியவற்றைப் பெறுவான்! இவனைப் பார்த்தார்கள் மற்றபுலவர்கள்! மனிதர்களைப்புகழ்வதில் தம்சொற்களைப் பயன் படுத்தினார்கள் பொருள் பெறுவதற்காக இல்லாத பண்புகளை ஏறிட்டுப்பாடுவார்கள்!

நான் எதற்கும் ஆசைப்படமாட்டேன்! என் கொள்கை களை விடமாட்டேன். என் சொற்களை (தேவாதிதேவனுக்கே) எம்பெருமானுக்கே பயன்படுத்துவேன்! அவனைப்பாடி மகிழ் விப்பேன். அதுவன்றோ நமக்கு நன்மை! மானிடரை ஒரு போதும் பாடேன்! குறுகிய பயன்களுக்காகப் பிற தெய்வங்களை நாடிநிற்கும் சஞ்சல புத்தியுள்ளவரை வெறுப்பேன் எம் பெருமானைக் கொண்டாடும் நெஞ்சுடையார்களையே குல தெய்வமாக நினைத்துத் தொழுவேன். காவளம்பாடிக் கண்ணன் கழலிணை நண்ணித் தொழுது அவனையே கவிபாடிக் கொண்டு திரிவேன். நீங்களும் பரமனவன் நாமம், அவன் புகழையும், அடியார்களின் பெருமையும் பாடுங்கள்! நீங்கள் விரும்பும் சிறந்த பயன்களை எல்லாம் பெறுவீர் என்று அறிவுரை கூறுகிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

செப்பேன் மனிதருக்கு என்செஞ் சொற்றமிழ்மாலை
கைப்பேன் பிறதெய்வம் காண்பாரை—எப்போதும்
காவளம்பாடித்திருமால் காற்றாமரை தொழுது
நாவளம்பாடித் திரிவேன் நான்.

(நூற் திருப்-அந் 38)

பேராசிரியர் இரா. அரங்கராசன் அவர்களின் "சிறியாத்தான்" அறிமுகம் அடுத்த இதழில் வெளியாகும்.

# அன்புள்ள வாசகரே!

ஆண்டு மலர் வெளியிடப்போவதை அறிவித்ததிலிருந்து உங்கள் ஆதரவு மழை எங்களை திக்குமுக்காடச் செய்கிறது. நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு மேலாகவே உங்களில் பலர் ரூ. 10/- செலுத்தி ஆண்டு மலருக்குப் பதிவு செய்து கொண்டு விட்டீர்கள். ஆண்டு மலர் வெளிவருவதற்கு முன்பாகவே எல்லாப் பிரதிகளுக்கும் பதிவாகித் தீர்ந்து விடும் நிலை ஏற்பட்டிருப்பதால் இதுவரை பதிவு செய்து கொள்ளாதவர்கள் இனியாவது தாமதிக்காமல் ரூ. 10/- (M. O. அல்லது Draft) செலுத்தி உடனடியாகப் பதிவு செய்து கொள்வது நலம். பிரதிகள் தீர்ந்துவிட்டபின் வருந்திப் பயனில்லை.

ஆண்டு மலரிலுள்ள சிறப்பு அம்சங்கள்:

★ ஆழ்வார் பாடல் பெற்ற திவ்யதேசங்களில் தொண்டை நாட்டில் மட்டும் அமைந்த திவ்யதேசத்து எம்பெருமான்களின் வண்ணப்படங்கள்.

★ தொண்டை நாட்டில் (மட்டும்) அவதரித்தருளிய ஆழ்வார் ஆசாரியர்கள் திருவுருவப்படங்கள்.

★ கோயிலின் முகப்புத் தோற்றங்களைக் கொண்ட அழகான சித்திரப்படங்கள் (Line Drawing).

* அத்தலங்களுக்குச் செல்லும் வழி, தலவரலாறு, அவ்வூரின் விசேஷங்கள் ஆகியவற்றை பயண வழிகாட்டி (guide) போல விவரிக்கும் விளக்கங்கள்.

★ அத்தலங்களைப் பற்றி ஆழ்வார்கள் பாடியருளியுள்ள பாசுரங்கள் —இவையனைத்தையும் கொண்டு திகழ்வது ஆண்டு மலர்.

இதன் தயாரிப்புச் செலவு ஒரு புத்தகத்திற்குச் சுமார் ரூ. 25 - ஆகிறது. ஆனால் நம் சந்தாதாரர்களுக்கு மட்டும் இதை ரூ 10/- விலையில் அளிக்கிறோம். விளம்பரங்களும் நன்கொடைகளும் பெறுவதன் மூலம் நஷ்டத்தை ஈடு கட்ட முயன்று வருகிறோம்.

உங்களில் பலர் இச்சிறந்த பணியில் கலந்து கொள்வதன் மூலம் எங்களுடைய சிரமத்தைக் குறைக்கலாம். உங்களில் நன்கொடை அனுப்ப சக்தியுள்ளவர்கள் அனுப்புங்கள். விளம்பரம் பெற்றுத்தர சக்தியுள்ளவர்கள் முயன்று பாருங்கள். ரூ. 500 நன்கொடை அல்லது ரூ. 500 பெறுமானமுள்ள விளம்பரம் பெற்றுத் தந்தால் ஒரு திவ்யதேசம் உங்களுடைய அன்பளிப்பாக அப்படத்தின் கீழே அறிவிக்கப்படும். (நீங்கள் பெற்றுத்தரும் விளம்பரங்களும் தனியாக வேறுபக்கத்தில் வெளியிடப்படும்.) உங்களில் நூற்றுவரில் ஒருவர் பெற்றுத் தந்தாலும் இப்பணி எளிதில் முடிந்துவிடும். நூற்றுவரில் ஒருவராக விரும்புபவர்கள் இவ்விதழுடன் இணைக்கப்பட்டிருக்கும் விளம்பர விண்ணப்பத்தை (Tariff) உபயோகித்து முயன்று பாருங்கள் கீதாசார்யன் நிச்சயம் வெற்றியை அருளுவான்.

எல்லாவற்றிற்கும் கடைசித்தேதி 15—9—81.

---

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

ச்ரிய: பதியான எம்பெருமானே ஸர்வஸ்மாத்பரன் (எல்லையற்ற மேன்மையன்) என்பதையும் பிறவி என்னும் பெரும் பிணியை ஒழிக்க மருந்திடவல்ல ஒரே ஒரு மருத்துவன் (மோக்ஷப்ரதன்) என்பதையும் திருவாய் மொழியில் நம்மாழ்வார் பலபல இடங்களிலும் பேசி இருந்தாலும், **உயர்வற, திண்ணன்வீடு, அணைவது அரவணைமேல், ஒன்றும் தேவும்** என்ற நான்கு பதிகங்களும் அவனுடைய பரத்வத்தையே பேசுவதில் நோக்காய் அமைந்துள்ளன. **அமரர்கள் அதிபதி** என்று பரமபதத்திலிருப்பைச் சொல்லி வேதாந்தம் காட்டியவழியில் பரத்வத்தை ஸூசிப்பது முதல் பதிகம் (பரத்வே பரத்வம்) **நம் கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே** என்கையால் இரண்டாமதில் விபவே (அவதாரத்தில்) பரத்வம் ஸூசிக்கப்பட்டது. இது புராணங்களில் காட்டிய வழியைப் பின்பற்றுவது. மூன்றுமதில் **அணைவது அரவணைமேல்** என்று க்ஷீராப்தியில் இருப்பையும், **தீர்த்தன் உலகளந்த சேவடி** என்றும், **பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை** என்றும் அவதாரத்தையும், பேசி பரத்வஸ்தாபனம் பண்ணினார். **ஒன்றும் தேவும்** என்ற நான்காமதில் **திருக்குருகூரதனுள் நின்ற ஆதிப்பிரான்** என்று **பொலிந்து நின்ற பிரான்** என்றும் பேசுகையாலே அர்ச்சாயாம் (திவ்விய தேசங்களில் பெயராமல் உள்ள நிலை) பரத்வம் ஸூசிக்கப்படுகிறது. இந்த நான்கு திருவாய்மொழிகளிலுமே எம்பெருமானுடைய ஜகத்காரணத்வத்தை திரும்பத்திரும்ப சோம்பலின்றாமலும் அலுப்பில்லாமலும் அருளிச்செய்வது நோக்கத்

தக்கது **காரணம்து த்யேய:** என்று வேதம் விதித்ததை நாம் பல்லவியாகக் கொள்ளவேண்டும். திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) எம்பெருமான் தானே காரணப் பொருள் என்பதை ப்ரஸித்தப்படுத்திக்கொண்டு **ஆதிநாதன்** என்ற பெயருடன் விளங்குகிறான். எது காரணப் பொருள் என்பதை சாஸ்த்ரம் கொண்டு அறிவது ஸ்ரமம் என்பதை முன்கட்டுரைகளில் கண்டோம். அந்த கஷ்டம் எதுவு மில்லாமல் **"நாமே காரணப்பொருள்"** நாட்டாரெல்லாம் கண்கூடாகக் கண்டு கொள்ளும்படி காட்டி தருகிறானிங்கு. **நின்றவாதிப்பிரான் நிற்க, மற்றைத் தெய்வம் நாடுதிரே!** என்று, "ஸர்வஸ்மாத்பரனை ஸர்வேச்வரன் எளியனாய் நம்மைக் கடைத்தேற்றுகைக் கென்றே ஸ்தாவரப் ரதிஷ்டையாய் வந்து நிற்க, இவனைப் பணிந்து வாழ்ச்சி பெறுமல் மற்றைய சிறு தெய்வங்களின் (இவர்களும் நம்மையொத்த ஸம்ஸாரிகளே) கால்களில் விழுந்து சீரழிந்து போகிறீர்களே!" என்று நம்மைத்தட்டி எழுப்பு வதாய் அமைந்துள்ளது இத்திருவாய்மொழி.

இத்திருவாய் மொழியின் ஈட்டுப்ரவேசத்தில் எம்பார் பணித்தாராக ஒரு அத்புதமான பங்க்தி காண்கிறது— "ஸகல வேத சாஸ்த்ரங்களையும் அதிகரித்து வைத்து, 'பரதத்வம் இன்னது' என்று அறுதியிட மாட்டாதே, கண்டவிடமெங்கும் புக்குத்தலை சாய்த்துத் தடுமாறித் திரியாநிற்க, எம்பெருமானார் தர்சநத்தில் எத்தனை யேனும் கல்வியில்லாத ,ஸ்த்ரீப்ராயரும் தேவதாந்தரங்களை அடுப்பிடுகல்லோபாதியாக நினைத்திருக்கிறது இவ்வொன்றும் **தேவும்** இப்பக்ஷத்திலே உண்டாகையிறே"— என்று "ஸம்ஸாரியாயிருக்கைக்கு மூலம், இதர தேவதைகள் பக்கம் ப்ராவண்யமும், பகவத்பரத்வஜ்ஞானமில்லாமையு மாய் இருந்தது. அதற்கு உறுப்பாக பகவத்பரத்வஜ் ஞானத்தை உபதேசிக்கிறார்" என்று ஸாரமாக நம்பிள்ளை அருளிச் செய்திருளிங்கு. இந்தத் திருவாய் மொழியினுப-

தேசத்தால் நாட்டங்கத் திருந்தியதைக் கண்டு மகிழ்ந்து மேலே ''பொலிக பொலிக'' என்ற பாகவத மங்களாசாஸனப்பதிகம் பாடப்பெற்றுள்ளது.

இனி எம்பார் வார்த்தையை விளக்குவோம். வேதங்கள், புராணங்கள், இதர சாஸ்திரங்கள் யாவற்றையும் கற்றிருந்தாலும், பலர், பரம்பொருள் இன்னது என்று ஒரு முடிவுக்கு வரத்துணியாமல், கண்ட கண்ட தெய்வங்கள் கால்களிலும் விழா நிற்கிறார்கள். நமது எம்பெருமானுடைய திருவடி நிழலில் ஒதுங்கியவர்கள், சிறிதளவும் கல்வியறிவில்லாதவர்களாயிருப்பினும், நாராயணனைத் தவிர்த்த மற்ற தெய்வங்களை அடுப்பிடுகல்லாக (அடுப்பு அமைக்கும் கற்களாக) நினைத்திருப்பார்கள். அதாவது இதர தெய்வங்களை லட்சியமே பண்ண மாட்டார்கள். இதற்குக் காரணம் — பரமகாருணிகரான நம்மாழ்வார் *ஒன்றும் தேவும்* என்று இந்தத் திருவாய்மொழியை நம்பொருட்டு அருளிச் செய்துள்ளமைதான். எம்பார் திருவாக்கினால் பிறக்கும் துணிவு ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனுக்கும் ஆழ்வார் அருளால் ஏற்பட வேண்டும்.

தேவதாந்தர பஜனம் பண்ணும் ஜனங்களை ஆழ்வார் வெறுத்துப் பேசுகிறார் **ஒன்றுந்தேவும்** என்று தொடங்கி

**ஒன்றுந்தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா**
**அன்று நான்முகன்தன்னொடு தேவருலகோடு உயிர்**
**படைத்தான்**
**குன்றம்போல் மணிமாடநீடு திருக்குருகூரதனுள்**
**நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத்தெய்வம் நாடுதிரே**

(நீங்கள் வணங்கும்) தேவதைகளும், அவர்களுடைய உலகங்களும், உம்மையொத்த உயிருள்ள பிராணிகளும், ஒன்றுமே இல்லாத பிரளயகாலத்தில், நான்முகனான பிரமனையும், மற்றைத் தேவர்களையும், அவர்கள் ஆளும் உலகங்களையும், உங்களையும் படைத்தவனும் (வேதம் முதலான திடமான பிரமாணங்களில்) நின்றவனுமான

ஆதிப்பிரான் **(ஆதிநாதன்)**, குன்றம் போல் மணி மாடங்கள் (இல்லங்கள்) உயர்ந்துள்ள திருக்குருகூர் அதனுள் கோயில் கொண்டு நிலைத்து நிற்க, இதரதெய்வங்களை நாடி ஓடுகிறீர்களே! இது என்ன பேதமை?

ஆதிகாரணனான பரம்பொருள் ஆழ்வார் திருநகரியில் ஆதிநாதன் என்ற பெயரைக்கொண்டு, யாவரும் வந்து கிட்டும்படி எளியனாய், தன்னை அடிபணிந்து வாழ்ச்சிபெற வருவாருண்டோ? என்று நம்மை நோக்கி நிலையாய் நின்று கொண்டிருக்க, இவனை விட்டு மற்றைத் தெய்வங்களைத் தேடிச்செல்கின்றீர்களே! ''கேட்டீரே நம்பிமீர்காள்! கருடவாகனனும் நிற்க சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே!'' என்றபடியன்றோ உங்கள்படி உள்ளது? (சேட்டை-மூதேவி) விடாய்த்தவன் கங்கைக்கரைக்குச் சென்று ஓடும் நீரைப் பருகாதே பக்கத்தில் கிணறு வெட்ட முயலுபவன் நிலைதான் வாஸுதேவன் இருக்க மற்றைத்தெய்வங்களை நாடுவது.

மேல் பாசுரங்களிலும் இவ்விஷயமே வலியுறுத்தப்படுகிறது. *நாடி நீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான் வீடில் சீர்ப்புகழ் ஆதிப்பிரான்* (வீடு இல் சீர் புகழ் — தானாக, இயல்பாக நிலைத்துள்ள கல்யாண குணங்களை உடையவன் என்ற புகழ்) என்றும், *பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து, *அன்று உடனே விழுங்கி கரந்து, உமிழ்ந்து, கடந்து இடந்தது கண்டும் தெளியகில்லீர்!* என்றும் ஜகத்காரணபூதன் ஆதிப்பிரான் என்பதையே நிலைநாட்டுகிறார். (பரந்த தெய்வம்—அனேக விதமான தெய்வங்கள்; அன்று—ஊழிக்காலத்தில்; உடனே—எல்லாவற்றையும் ஒன்று சேர; கரந்து—தன்னுள்ளே மறைத்து வைத்துக் காத்து; கடந்து—உலகங்களை அளந்து; இடந்தது—மகாவராகமாய் இடந்தெடுத்தது; கண்டும்—பிரமாணங்கள் காட்டக் கண்டும் அறிந்தும்).

(தொடரும்)

# சிறுவர்களுக்கு அளிக்கும் சமயப் பொது அறிவு

வழங்குபவர் : 'ஸ்தலசயனத்துறைவார்'

1. 'ஆத்திகர்கள்' எனப்படுவோர் எவர்?
(பகவான்) கடவுள் இருக்கிறார் என்று நம்புகிறவர்கள்.

2. வாழ்க்கைக்கும் சமயப்பற்றுக்கும் என்ன தொடர்பு?
நல்வாழ்க்கையின் அடிப்படையே சமயப்பற்றுதான்!

3. இந்துக்களுக்குரிய முக்கிய இலக்கணம் யாது?
நெற்றிக்குறி அணிதல்.

4. குளித்த பிறகே உணவு உண்ணவேண்டும் என்று
என் தாய் கட்டாயப்படுத்துகிறாளே!
'கூழானாலும் குளித்துக்குடி' என்பதை மறந்தாயோ!

5. உணவு உண்ண உட்காருவதற்கும் முறை உண்டா?
அமர்ந்து உண்க; தெற்கு நோக்கி அமராதே!

6 திவ்யப்ரபந்தம் என்பதைக் குறிக்கும் மாற்றுச்சொல்லே இல்லையா?
'அருளிச் செயல்' என்ற சொல்லைப் பயன் படுத்துவது மிகவும் சிறந்தது!

7. நின்று கொண்டும், சென்று கொண்டும் ஒருபொருளை உண்டால் என் தாய் முகம் சுளிக்கிறாளே! ஏன்?
மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்கும் உள்ள வேறுபாடு இதில தானே அமைந்திருக்கிறது!

8. 'சாற்றுமுறை–சாற்றுமறை'—இவற்றுள் சரியானது எது?
'சாற்றுமறை' என்றே கூறுக.

9. இனிய உணவை எங்கிருந்து வாங்கி உண்டால் என்ன?
பகவான் அமுது செய்த உணவே உடலுக்கு நன்மை தரும்.

10. வைணவர்கள் திருமாலையே உயர்ந்த தேவதையாகக் கொண்டாடுகிறார்களே!
'திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு.'

# இராமாயணச் சுவையமுதம்

வேதாந்தவாசிரியர் தயாசதகத்திலே ''நிஷாதாநாம் நேதா கபிகுலபதி; காபி சபரீ.'' என்று ஸ்ரீ ராமாவதாரத்தில் விசேஷாநுக்ரஹபாத்ரபூத வ்யக்திகள் மூவரை யெடுக்கின்றவர் குஹப் பெருமாளையும் சபரியையும் எடுத்திருக்கின்றார். இவ்விருவர்க்குமுள்ள வாசியைச் சிறிது ஆராய்வோம். சபரியிடத்தில் பெருமாள் இவ்வளவு கலந்து பரிமாறக் காரணமென்ன? என்று ஆலோசிக்கும்போது குஹனிடத்தில் பெருமாள் நடந்துகொண்ட விதமும் ஆலோசிக்கப்படவேண்டும்.

## ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
## அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

குஹன் சில உணவுப் பொருள்களைக் கொணர்ந்து கொடுத்து இவற்றைத் திருவுள்ளம் பற்றியருள வேண்டுமென்று வேண்ட, அதற்குப் பெருமாள் கூறின மறுமொழி (அயோ. 50) ''யத் த்விதம் பவதா கிஞ்சித் ப்ரீத்யா ஸமுபகல்பிதம், ஸர்வம் தத் அநுஜாநாமி ந ஹி வர்த்தே ப்ரதிக்ரஹே. அச்வாநாம் காதநே நாஹமர்த்தீ நாந்யேந கேநசித். ஏதாவதாத்ர பவதா பவிஷ்யாமி ஸுபூஜித:'' என்பது. நான் இந்த வனவாஸத்தில் யாரிடத்திலும் ஏதும் பெற்றுக்கொள்வதில்லையென்று விரதம் கொண்டிருக்கிறேன்; நான் எந்த ரதத்தில் வந்தேனோ அந்த ரதம் இன்னும் அயோத்திக்குத் திரும்பிப் போகாமையினாலே தேர்க்குதிரைகள் விடாய்த்திருக்கின்றன; அவற்றுக்கு வேண்டிய உணவுகளையே நான் விரும்புபவன் என்று சொல்லி அவற்றைத் தாம் கைப்பற்றாமலேயிருந்துவிட்டார் பெருமாள். இங்குப் பெருமாள் ''நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே'' (நான் தானம் வாங்கக்கூடாதென்று விரதம்

வைத்துக்கொண்டிருக்கிறேன்.] என்றது அவசியம் சொல்லியாக வேண்டிய வார்த்தையோ? குஹன் மதுபர்க்கம் முதலிய சிலவுணவுப்பொருள்களைக் கொணர்ந்து கொடுக்க வந்தானேயல்லாது தன தான்ய வஸ்த்ராதிகள் எதுவும் கொடுக்க வந்திலன்; அவற்றைக் கொடுக்கவந்தால் அப்போது நான் ப்ரதிக்ரஹம் பண்ணுவதில்லையென்று சொல்லி மறுக்க நியாயமுண்டு. தேன் முதலிய காட்டுணவுப் பொருள்களையே கொடுக்கவந்த போது ''ந ஹி வர்த்தே ப்ரதிக்ரஹே'' என்று சொல்லி மறுத்ததானது அவசியம் ஆராயத்தக்கதன்றோ?

குஹனிடம் இப்படிச் சொன்ன இவரே சபரியிடம் மறுத்துக் கூறாமல் ''அர்ச்சிதோஸ்மி த்வயா'' என்று சொல்லி அவளுடைய ஸமர்ப்பணையை உகந்து ஏற்றுக் கொண்டார். இதே நாமெடுத்துக் காட்டியுள்ள ஸ்ரீவசன பூஷண வியாக்கியான ஸ்ரீஸூக்தியில் ''குரு சுச்ரூஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய்'' என்று மாமுனிகள் மருமமாக வருளிச் செய்திருப்பது உயிரான வார்த்தை. சபரியிடம் மிகச் சிறந்ததொரு தருமம் குருசுச்ரூஷையென்பதிருந்தது. இதைக் கபந்தன் பெருமாளுக்குத் தெரிவித்தனன். ''ச்ரமணீ சபரீ நாம காகுத்ஸ்த சிரஜீவிநீ, த்வாம் து தர்மே ஸ்திதா நித்யம்'' என்றும், ''ச்ரமணீம் தர்மநிபுணாம் அபிகச்ச'' என்றுமுள்ள கபந்தனது வார்த்தைகளில் தர்ம சப்தத்தினால் விவக்ஷிதம் குரு சுச்ரூஷையேயாகும்.

பெருமாளும் சபரியைக் கண்டவுடனே க்ஷேமம் வினவுகையில் ''கச்சித்தே குருசுச்ரூஷா ஸபலா சாருபாஷிணீ'' என்று 'உன்னுடைய குருசுச்ரூஷை நிறைவேறியதா' என்று கேட்டிருக்கிறார். அவளும் தான் செய்த குருசுச்ரூஷையைப் பற்றி ஆனந்தமாக விடை கூறியிருக்கிறாள்; 'இங்கு என்னுடைய பணிவிடையைக் கொண்ட ஆசாரியர்கள் திருநாடு சென்றிருக்கிறார்கள்; அவர்களின் திருவடிவாரம் சென்று சேர எனக்குஅனுமதி தந்தருள வேணும் என்றும் கோரி

விருக்கிறுன். இத்தகைய தருமம் குஹனிடத்தில் இல்லாமை பற்றியே அவன் தந்த உணவுகளைத் திருவுள்ளம் பற்றவில்லை என்பர் பேராசிரியர்கள்.

ஆர்ஜவமே வடிவெடுத்த பெருமான் குஹனிடத்தில் ''ந ஹி வர்த்தே ப்ரதிக்ரஹே'' என்று சொன்னது கபடந்தானே, இது தகுமோ? என்கிற சங்கையொன்று செனித்து நிற்கிறது. கேண்மின்: இந்த வார்த்தைக்கு 'நான் யாரிடத்திலும் எதுவும் பெற்றுக்கொள்ளமாட்டேன்' என்கிற பொருள் படவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; 'உன்னிடத்தில் வாங்கிக்கொள்ள எனக்கு விருப்பமில்லை' என்று சொன்னதாகவும் பொருள்படும். அப்படி விருப்பமின்மைக்குக் காரணம் மேலே நாம் விவரித்ததே.

வேதாந்ததேசிகர் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் இரண்டாம் அங்கத்தில், விவேகன் ஆனந்தமாகப் பாடுவதாய் வைத்து அற்புதமானவொரு சுலோக மியற்றியுள்ளார்; ''பஜவதி பரத்வாஜே புக்திஸ் ததா சபரீக்ருஹே'' என்பது அதன் முதற்பாதம். ''ஜயதி லலிதோதாத்துங்கா வ்ருத்திர் தசாஸ்யரிபோரிதி'' என்பது கடைப்பாதம்; பெருமானுடைய நடவடிக்கைகளை விமர்சித்துப் பார்த்தால் ஏற்றமான சரிதை ஒரு புறம், அதற்குப் பிரதி கோடியான தாழ்வான சரிதைமற்றொருபுறம் காண்கின்றதே! என்கிறார். விச்வாமித்ர முனிவர் பக்கலிலே பணிந்து நின்றரென்று ஒருபுறம். குரக்கரசனான ஸுக்ரீவனிடத்திலே பணிந்துநின்றரென்று மற்றொரு புறம். பரசுராமனுடைய தவத்தைச் சிதைத்தாரென்று ஒருபுறம்; ஒரு க்ஷுத்ரஜந்துவான காக்கையின் கண்ணைச் சிதைத்தாரென்று மற்றொரு புறம். மஹர்ஷியான பரத்வாஜருடைய ஆச்ரமத்திலே அமுதுசெய்தாரென்று ஒரு புறம். சபரிகையாலே அமுது செய்தாரென்று மற்றொரு புறம். ஹாஹா! இவையென்ன சேராச் சேர்த்திகள்! என வியந்து கூறுகிறபடி. இத்தால் சபரிகையாலே அமுது செய்தருளினது பரத்வாஜாச்ரமத்திலமுது செய்ததோடொக்க மதிக்கத்தக்கதென்று காட்டினபடி.

(பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ) பிராட்டியைப் பறிகொடுத்துப் பெரிய உடையாரையும் ஸம்ஸ்கரித்து ''ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸோ நஷ்டா ஸீதா ஹதோ த்விஜ:; ஈத்ருசீயம் மமாலக்ஷ்மீர் நிர்தஹேதபி பாவகம்'' என்று பரிதபித்துக்கொண்டே பம்பைக் கரையேறப் போந்த பெருமாள் அந்த பம்பாஸரஸ்ஸின் ஸந்நிவேசங்களைக் கண்டு பொறுக்கொணாத் துயரத்தில் ஆழ்ந்திருந்தார். இந்நிலைமையில் இவர் தேறுவதெங்ஙனேயோ? என்று அனைவரும் வயிறு பிடிக்க வேண்டியிருந்தது. அப்போது விதிவசமாக மாருதாத்மஜரான திருவடி அங்கு நேர்பட்டார் என்று சொல்லுகிற மஹர்ஷி 'ஹநும்தா ஸங்கதோ வாநரேண ஸ:'' என்று சொல்லாமல் (வாநரேண ஹ) என்றார். (ஹ) என்றது ஸந்தோஷக்குறி, தைவாதீனமாகப் பெருமாளுடைய உயிர் பிழைத்தது! என்று ஸந்தோஷம் பொங்கிச் சொல்லுகிறவார்த்தை. ''காட்டிலே வழிபறியுண்டவர் தாய் முகத்தில் விழிக்குமா போலே'' என்பது ஆசாரியர்களின் அருளிச்செயல்.

அதாவது, ஒருவன் காட்டிலே வழிபோகும்போது கள்ளர்கையிலகப்பட்டு ஸர்வஸ்வத்தையும் பறிகொடுத்து விட்டு வருந்தாநிற்கையில் தாய்வந்துமுகங்காட்டினால் ஆச்வஸிக்க நேருமாபோலே வழிபறியுண்ட பெருமான் ஆச்வஸிக்கப் பாங்காகத் திருவடி வந்து முகங்காட்டினரென்க. மேலுதாஹரித்த ஆசார்ய ஸ்ரீ ஸூக்தியை வடமொழியில் மொழி பெயர்த்த கோவிந்தராஜாரியர் ''சோரை: வநே அபஹ்ருதஸர்வஸ்வஸ்ய ஸ்வஜநநீமுகாவலோகநவத் அதீவ ஆச்வாஸநமிதி முநேர் ஹர்ஷ:'' என்றெழுதியிருந்தார். (ஸ்வஜநநீமுக) என்பது (ஸ்வஜநமுக) என்று அச்சில் விழுந்திருக்கின்றது. இந்த மாறுபாட்டில் பொருள் சிதைவில்லையென்று நினைக்கலாமானாலும் (ஸ்வஜநநீமுக) என்றே ஆசிரியர் எழுதினதென்று தத்துவமுணரவேணும். (தொடரும்)

# கண்ணன் கதைகள்

## தீபம் நா. பார்த்தசாரதி

ஒரு நாள் ஆயச்சிறுவர்களை அழைத்துக்கொண்டு யமுனைக் கரையிலுள்ள காட்டில் போய் மகிழ்ச்சியாக இருந்துவிட்டு வர விரும்பினான் கண்ணன். அந்த மகிழ்ச்சிப் பயணத்திற்குக் கோகுலத்துச் சிறு பிள்ளைகள் ஒரு மனமாக இணங்கிப் புறப்பட்டனர். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டில் தாய்மார்களிடம் சொல்லிப் பலவகை உணவுப் பொருள்களைத் தயார் செய்து கட்டி வாங்கிக் கொண்டனர். அதிகாலையில் ஆநிரைகளைப் பற்றிக் கொண்டு வனத்தை நோக்கிச் சென்றனர். மரகத விரிப்பு போல் எல்லையற்றுப் பரந்துகிடந்த வனத்தின் புல்வெளிகளில் பசுக்களை மேய விட்டுவிட்டுத் தங்கள் விளையாட்டுகளிலே கவனம் செலுத்தலாயினர் அவர்கள்.

அந்த வனத்தில் பல நிறமலர்கள், பல நிறத்தளிர்கள், விதவிதமான கனிகள், காய்கள் எல்லாம் இருந்தன. அவற்றைக் கொய்து மாலைகளாகவும் கண்ணிகளாகவும் அணிந்து மகிழ்ந்தனர். மரங்களில் ஏறிப் பழங்களைப் பறித்தனர். பூக்களைச் செண்டு கட்டிப் பந்தாடினார்கள். குளங்களில் குதித்து நீரில் முக்குளித்து விளையாடினார்கள். ஒருவருடைய சோற்று மூட்டையை இன்னொருவர் ஒளித்து வைப்பதும் கண்டுபிடிப்பதுமாகக் குறும்புகள் செய்தார்கள். மரங்களில் இருந்த குரங்குகளோடு போட்டியிட்டு அவற்றைத் துரத்தி வேடிக்கை பார்த்தார்கள். கண்ணனும் பலராமனும் கூட இந்த விளையாட்டுக்களில் எல்லாம் எல்லாருடனும் சேர்ந்து கலந்து கொண்டனர்.

இப்படி இவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது மரக்கிளை ஒன்றிலிருந்து யானையின் கால் போலப் பருத்து நீண்ட மலைப் பாம்பு ஒன்று கீழே இறங்கியது. அது எந்த மரத்தின் கிளையிலிருந்து இறங்கியதோ, அதனடியில் கண்ணன் நின்று கொண்டிருந்தான். சிறுவர்கள் ''பாம்பு! பாம்பு'!! என்று கூச்சலிட்டுக் கொண்டே ஓடினர். கண்ணனால் ஓட முடியவில்லை. அவன் பாம்பினிடம் மாட்டிக் கொண்டான். நெருப்புக் கொழுந்து போன்ற அதன் பிளந்த நாவுக்கு முன் மிரண்டு அஞ்சி நிற்க வேண்டியதாகிவிட்டது அவன் நிலை. எனினும் மாயனான கண்ணனுக்கா வழி தெரியாது? கண்ணன் விலகி நின்றுகொண்டு தனது மாயையால் தான் நிற்குமிடம் பாம்பின் கண்களுக்குத் தெரியாதவாறு ஒளிந்து தோன்றினான்.

ஏமாற்றமடைந்த மலைப்பாம்பு கண்ணனோடு வந்திருந்த சிறுவர்களையும், கன்றுகளையும் விழுங்கிவிட்டது. உயிர்களைக் காத்தருள வேண்டும் என்னும் ஆவலையே தனது நோக்கமாகக் கொண்ட கண்ணன் வருந்தினான். அந்தப் பாம்பின் வயிற்றிலிருந்து கன்றுகளையும் சிறுவர்களையும் விடுவிக்க வேண்டுமானால் தான் அதன் வயிற்றில் நுழைய வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. தானாகவே வெளிப்பட்டு அந்த மலைப்பாம்பின் பிளந்த வாய்க்குள் நுழைந்தான் அவன்.

உலகத்தையே விழுங்கி ஏப்பமிடுவதற்கு ஓர் பெரிய நரகவாயில் திறப்பது போல் அகாசுரன் என்ற அந்த மலைப் பாம்பின் வாய் விரிந்து கொண்டே போயிற்று. முப்பத்து முக்கோடி தேவர்களும், மானிடர்களும், முனிவர்களும் அஞ்சி நடுங்கினார்கள். உலகத்தையே விழுங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஊழிப்பேரிருள்தான் வாய் திறந்து விட்டதோ என்று மயங்கினர். சிறுவனாகப் பாம்பின் வயிற்றுக்குள்ளேயே நுழைந்த கண்ணன் சிறிது சிறிதாகத் தன் உருவத்தை வளர்த்துக் கொண்டு போனான். அண்ட

சராசரங்களும் தானேயாகிய பெருமான், மனம் வைத்தால் எதுதான் அரியது? எவராலும் அடக்கமுடியாத விசுவ ரூபத்தை அவன் மேற்கொண்டால் அதைத் தாங்குவோர் தாம் யார்? உள்ளே கண்ணனின் உருவம் பெரிதாகப் பெரிதாகப் பாம்பின் வயிறு வெடித்துப் பிளந்து விடுவது போல வீங்கிக் கொண்டே வந்தது. சிறிது நேரத்தில் அந்தப் பாம்பின் தலைப்புறத்தை இரு கூறுகப் பிளந்து கொண்டு வெளிவந்தான் கண்ணன். அதன் வயிற்றினுள் ஏற்கனவே, குடி புகுந்திருந்த கன்றுகளும், கோகுலத்துச் சிறுவர்களும் நஞ்சினால் மயங்கிக் கிடந்தனர். கண்ணன் அவர் களை மூர்ச்சை தெளிவித்து மயக்கத்திலிருந்து விடுவித்தான்.

கண்ணன் உடலைத் தீண்டப் பெற்றதனால் நச்சுத் தன்மை பொருந்திய அந்தப் பாம்பும் நலமடைந்தது. [illegible] சாந்தமாகக் கொலைக்குணம் நீங்கி அருளும் ஞானமும், சாத்துவிகமும் அதன் உள்ளத்தில் முகிழ்த் தது போலும்; கண்ணனைக் கொன்றொழிப்பதற்காகக் கம்சனால் ஏவப்பட்ட 'அகாசுரன்' என்னும் அந்தப் பாம்பும் இறப்பதற்கு முன் கண்ணனைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து வணங்கியது.

கோகுலத்துச் சிறுவர்கள் அந்தக் காட்சியை வியப் புடன் பார்த்துக்கொண்டு நின்றார்கள். கறவை, கன்றுகள் மேய்தலை மறந்து நின்றன. நல்லவர்களைச் சார்ந்தவர்களுக் கெல்லாம் நன்மை வந்தெய்தும் விந்தையை அன்று அங்கே யமுனைக் கரையில் நடந்த நிகழ்ச்சி காட்டியது.

கண்ணன் தங்களைப் போல ஒரு சாதாரணச் சிறுவன் அல்ல; அவனிடம் ஏதோ ஒரு மந்திர சக்தி அடங்கியிருக் கிறது. அவன் விந்தைகளைச் செய்வதற்கென்றே பிறந்திருக் கிறான். தன்னை நாடி வரும் தீமைகளை அழித்தும், நன்மை களாக மாற்றியும், அவன் செய்யும் திருவிளையாடல்களைத்

தொடர்ந்து கண்டபோது அந்தச் சிறுவர்கள் மனத்தில் பயத்தோடு கூடிய ஒருவகை அன்பும், மரியாதையும், கண்ணன் மேல் ஏற்பட்டன. அவனைத் தங்களுக்குள் பெரியவனாக எண்ணுகிற மனநிலை அவர்களுக்கு இயற்கையாகவே ஏற்பட்டது.

இன்னொரு நாள் யமுனைக் கரையில் உள்ள புல்வெளிகளில் மாடு கன்றுகளை மேயவிட்டு மரத்தடியில் அமர்ந்து கட்டுச் சோற்றை அவிழ்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் கோகுலத்துச் சிறுவர்கள். கண்ணனும் அவர்களிடையே இருந்தான். புல்லாங்குழல் ஊதியும், பலவகை வேடிக்கைப் பேச்சுக்களைப் பேசியும் சிறுவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டிக்கொண்டிருந்தான் கண்ணன். அவர்களெல்லோரும் அவனைப் பெரியவனாக மதித்தாலும் அவன் சிறுவர்களாகிய அவர்களுக்கிடையே தானும் ஒரு சாதாரணச் சிறுவனாகவே பழகுவதற்கு விரும்பினான்.

சிரிப்பும் விளையாட்டுமாக அவர்கள் இப்படிப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த போது திடீரென்று எதிர்ப்புறம் புல்வெளிகளில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளையும் கன்றுகளையும் காணவில்லை.. இருந்தாற்போலிருந்து அவை எப்படி மறைந்தன? எங்கே மறைந்தன? என்ற மர்மம் புரியவில்லை. சிறுவர்கள் பயந்துபோய் அழத்தொடங்கி விட்டனர். ''பயப்படாதீர்கள்! உங்கள் கன்றுகளையும், மாடுகளையும் நான் தேடி அழைத்துக்கொண்டு வருகிறேன். அதுவரை நீங்கள் இங்கேயே இருங்கள்''—என்று கூறி விட்டுக் கண்ணன் அவர்களுக்காக மாடு, கன்றுகளைத் தேடிக்கொண்டு புறப்பட்டான்.

யமுனைக்கரையில் அங்கும் இங்குமாகச் சிறிது தூரம் தேடியலைந்து விட்டுக் கண்ணன் திரும்பினான். மாடுகளோ, கன்றுகளோ போன சுவடே தெரியவில்லை. திரும்பவும்

பழைய மரத்தடிக்கு வந்து பார்த்தபோது அங்கே நின்று கொண்டிருந்த கோகுலத்துச் சிறுவர்களையும் காணவில்லை. கண்ணன் திடுக்கிட்டான். மாடு கன்றுகள் மறைந்ததைப் போலவே, சிறுவர்கள் மறைந்ததும் மர்மமாகவே இருந்தது. வேண்டுமென்றே யாரோ சிறுவர்களையும் கன்றுகளையும் மறைத்து வைத்துச் சூழ்ச்சி செய்வதாகப்பட்டது அவனுக்கு. கோகுலத்துச் சிறுவர்களையும், மாடு கன்றுகளையும், மறைத்தது யார் என்று ஞான நோக்கத்திலிருந்து பார்த்தான். நான்முகக் கடவுளாகிய பிரம்மாவின் உருவமே அவன் ஞானப் பார்வையில் தெரிந்தது. பிரம்மாதான் அவர்களை மறைத்து வைத்துக்கொண்டு சோதனை செய்கிறாரென்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. நேரமோ மாலை நேரமாகிவிட்டது. மாடு கன்றுகளுடன் கோகுலத்துச் சிறுவர் வழக்கமாக வீடு திரும்பும் நேரம் அது. இன்னும் சிறிது நேரம் தாமதித்தால் சிறுவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளையும், மாடு கன்றுகளையும் காணாமல் சந்தேகமுற்று யமுனைக் கரைக்கே தேடிக் கொண்டு வந்தாலும் வந்துவிடுவார்கள். என்ன செய்வதென்று சிந்தித்தான் கண்ணன். தன் மாயாசக்தியினால் அத்தனை சிறுவர்களாகவும், மாடு கன்றுகளாகவும் தானே உருவெடுத்தான். பிருந்தாவனத்திற்குப் புறப்பட்டான். இப்படியே பல நாட்கள் தொடர்ந்து கண்ணன் ஒருவனே தன் மாயையினால் காணமற்போனவர்களின் குறையை நிறைவு செய்து வந்தான்.

பின்பு ஒரு நாள் கோவர்த்தன மலையில் பலபத்திரன் எல்லா ஆயர்களோடும் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது உண்மை வெளிப்பட்டது. பரமான்மாவாகிய கண்ணனின் திருவிளையாட்டை அறிந்து எல்லோரும் வியந்து வணங்கினர். மாடு கன்றுகளையும், சிறுவர்களையும் ஒளித்து வைத்திருந்த பிரம்மாவே கண்ணனின் அற்புதச் செயலைக் கண்டு ஆச்சரியமடைந்தார். உண்மையாகவே தான் மலைக் குகைக்குள் கொண்டுபோய் ஒளித்து வைத்திருந்த

மாடு கன்றுகளையும், சிறுவர்களையும், தனக்குத் தெரியாமலே கண்ணன் விடுவித்துக் கொண்டு வந்து விட்டானோ என்ற பயம் பிரம்மாவுக்கு உண்டாகிவிட்டது. அவர் தான் ஒளித்து வைத்திருந்த மலைக்குகைக்கு ஓடிப் போய்ப் பார்த்தார். ஒளித்து வைத்திருந்த ஆநிரைகளும் சிறுவர்களும் அப்படியே இருக்கக்கண்டு கண்ணனின் பெருமையை எண்ணி வியந்தார். தாம் ஒளித்து வைத்திருந்த மாடு கன்றுகளையும் சிறுவர்களையும் விடுதலை செய்து விட்டுக் கண்ணனிடம் போய் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு அவனைப் பலவாறு புகழ்ந்து வணங்கினார். பெருஞ்செயல்களையும் தனது மாயையால் சிறிய விளையாட்டைப் போலவே செய்துமுடிக்கும் ஆற்றலுள்ளவனாகிய கண்ணன் புன்னகை செய்துகொண்டே பிரம்மாவை மன்னித்தனுப்பினான்.

(தொடரும்)






## 23. கண்ணீர் துளிகள்.

அமாவாசையன்று இராக்கால கோஷ்டி முடிந்த பின்பு அழகிய மணவாளன் சந்நிதியிலிருந்து பாகவத கோஷ்டி சூழ மடத்துக்குத் திரும்பிய யதிராஜர் வயோதிகத்தால் ஏற்பட்ட சிரமத்தை சரிப்படுத்திக் கொள்ள, கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டார். தன்னை தெண்டன் சமர்ப்பித்து விடை கொள்ள நின்ற பாகவதர்களில் பின்னையுறங்கா வில்லிதாஸனையும், அன்று கள்ளத் தொழில் செய்ய வேண்டிய இரு அந்தண சிரேஷ்டர்களையுந்தவிர மற்றவர்களுக்கெல்லாம் விடை கொடுத்து அனுப்பினார்.

வில்லிதாஸன் கைகட்டி வாய்புதைத்து நின்றான். "வில்லி இன்று என்னமோ உடலெல்லாம் வலியாயிருக்கிறது. கால்களிலும் குடைச்சலாயிருக்கிறது. சிறிது நேரம் நீ கூட இரு" என்று கூறினார் உடையவர். பிறகு இரு அந்தணர்களையும் நோக்கி "தெரியாமல் உங்களை நிறுத்தி விட்டேன். உங்களுங்கு வேறு வேலையிருககும். அதை கவனியுங்கள்" என்று சூசகமாகச் சொன்னார்

ஸ்வாமியினுடைய சூசகச் சொற்களாலும் அத்தனை பாகவதர்களில் அவர் தங்களை [மாத்திரம் கள்ளத் தொழிலுக்கு தேர்ந்தெடுத்ததாலும் உள்ளூர உவகையுற்ற] இருவரும் ஸ்வாமியிடமிருந்து விடை கொண்டனர். வில்லிதாஸன் கவலை முகத்தில் விரிய நின்றிருந்தான் சிலவிநாடிகள். பிறகு

ஸ்வாமிக்கு எட்ட உட்கார்ந்து பாதங்களை வருடலானான். ஸ்வாமி திருமேனியில் ஏற்பட்ட வலி அவன் மனத்தில் பெரு வலியை ஏற்படுத்தியிருந்ததால் அவன் கிலேசமும், யதிராஜர் திருவடி சம்பந்தம் என்பது தனக்கு மட்டும் நேரடியாகவே கிடைத்ததென்ற நினைப்பால் உவகையும கலந்த உணர்ச்சிகளுடன் மிகமெதுவாக திருவடிகளை வருடினான். ஸ்வாமியும் அவன் அன்பு சொட்டும் உள்ளத்தை தமது கடைக் கண் வீச்சினாலேயே கவனித்து புன்முறுவல் கொண்டு அந்த இடத்திலேயே படுத்துக் கொண்டார். நேரம் ஓடிற்று. வில்லிதாஸன் கண்ணும் கருத்துமாக சரண சேவை செய்து கொண்டிருந்தான்.

உடையவர் உள்ளத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்திருந்த ஆண்டான் உள்ளிருந்து ஸ்வாமி முன்பு வந்து ''அடியேனுக்கு ஏதாவது ஆக்ஞை உண்டா?'' என்று வினவினார்.

''ஏதுமில்லை. நீ போய் படுத்துக் கொள்'' என்று நியமித்தார் உடையவர். ஆண்டான் சென்றார். அவர் மடத்து அறைகளிலொன்றை திறக்கும் ஒலி வில்லிதாஸன் செவிகளில் விழுந்தது. அதே சமயத்தில் காவிரிக் கரையிலிருந்த ஒரு குடிசையின் கதவு எந்தவித அரவமுமின்றி மெதுவாகத் திறக்கப்பட்டது.

குடிசைக்குள்ளே கயிற்றுக் கட்டிலில் தாமரை விழிகளை மூடி ஒருக்களித்துப் படுத்திருந்தாள் பொன்னாச்சி. தனது குடிசைக் கதவு வழக்கத்துக்கு மாறாக மிக எச்சரிக்கையுடன் திறக்கப் படுவதையும், உள்ளே யாரோ நுழைவதையும் குடிசைக் கோடியில் தொங்கிய தூண்டா விளக்கின் மங்கலான ஒளியில் ஓரக்கண்ணால் பார்த்தாள். வந்தவர்கள் மடத்து அந்தணர் என்று தெரிந்ததும் கண்களை மூடிக்கொண்டாள்.

உள்ளே நுழைந்த அந்தணர் பொன்னாச்சியை உற்று நின்று கவனித்தனர் சில விநாடிகள். அவள் ஆழ்ந்த நித்திரையிலிருப்பதாக நினைத்து அவள் பாதங்களை அணுகினர்.

ஒரு அந்தணர் மெள்ள ஒரு பாதத்தின் சிலம்பை வெகுசாமர்த்தியமாகக் கழற்றினார். அடுத்த சிலம்பு அவள் ஒருக்களித்து கால் மேல் கால் போட்டுப் படுத்திருந்ததால் கழற்ற முடியாத நிலையிலிருந்ததால் தமது [illegible] கண்ணை நோக்கினார். அவர்கள் சங்கடத்தைப் புரிந்து கொண்ட பொன்னாச்சி மேலிருந்த காலை சிறிது நீக்கினாள். சிலம்பைக் கழற்ற வசதி செய்ய. ஆனால் விழித்துக் கொண்டு விட்டதாக நினைத்து பயந்து அந்தணர்கள் குடிசைக் கதவை நோக்கி நகர்ந்து வெளியே வந்தனர். பிறகு தாங்கள் பூர்வ ஜென்மத்தில் மான்களாக இருந்ததை [illegible]. குடிசையில் அவர்கள் பிடித்த [illegible] திருக்கருவில் வந்த பின்புதான் நின்றது.

அங்கே மடத்தின் வாசலில் சந்தித்த ஆண்டான் ''சத்தம் செய்ய வேண்டாம். இப்படி ஒளிந்திருங்கள் மல்லனை அனுப்பி விட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றார். ''உடையவர் ஸ்வாமி நித்திரை மேற்கொண்டிருக்கிறார். நீ போகலாம்'' என்றார்.

''ஸ்வாமி சயனம் ஆகவில்லையே'' என்றான் வில்லி தாஸன்.

அப்பொழுதுதான் விழித்துக் கொண்டது போல் கண்களைத் திறந்த உடையவர் 'வில்லி! நீ இன்னும் இல்லம் செல்லவில்லை?'' என்று வினவினார்

''இல்லை'' வில்லி மெல்லப் பேசினான்.

''ஏன்?''

''ஸ்வாமி விடை கொடுக்கவில்லை''

''நல்லபிள்ளை நீ. நான் அயர்ந்துவிட்டால் அதற்காக இங்கேயே இருப்பதா? நடுநிசி தாண்டிவிட்டதே. போ. பொன்னாச்சி தனியாயிருப்பாள்''

"ஸ்வாமி! அவன் எப்படி தனியாயிருக்க முடியும்?"

"வேறு யாராவது துணையிருக்கிறார்களா?"

"சகல சராசரங்களையும் பாதுகாக்கும் பகவான் இல்லையா?"

இதைக்கேட்ட உடையவர் அசந்து போனார். "ஆமாம் இருக்கிறார். இருப்பினும் நீ போய் வா. பொன்னாச்சி பெண் பிள்ளை. பயப்படுவாள்" என்று இல்லம் செல்லும்படி ஆக்ஞாபித்தார் எம்பெருமானார்.

மடத்துத்தாழ்வரையில் ஒளிந்திருந்த அந்தணரிருவரும் வில்லிதாஸன் தலை மறைந்ததும் உள்ளே தலைகாட்டினர்.

"போன காரியம் எப்படி?" என்று வினவினார் உடையவர்.

"பாதி ஜெயம்" என்றார் ஒரு அந்தணர்

"ஒரு சிலம்பைத்தான் கழற்றமுடிந்தது. இன்னொன்றைக் கழற்றுவதற்குள் மல்லன் மனைவி விழித்துக்கொண்டாள்" என்று கூறிய அந்தணர், தாங்கள் திருடிய சிலம்பை ஸ்வாமியிடம் நீட்டினார்கள்.

அதைக்கையில் வாங்கிய உடையவர் சில விநாடிகள் அதைத்தமது திருக்கையினால் தடவினார். "இன்னும் ஆறு மாதத்திற்கு மடத்துச்செலவுக்குப் பஞ்சமில்லை" என்று சற்று இரைந்தே சொன்னார். பிறகு அந்தணர்களை நோக்கி "உங்களால் மடம் பிழைத்தது" என்று பாராட்டினார்.

"எல்லாம் ஸ்வாமி கிருபை" என்றார் ஒரு அந்தணர்.

உடையவர் உள்ளூர நகைத்துக்கொண்டார். திருட்டுக்கு ஸ்வாமி கிருபையாம். நல்லது நல்லது" என்று உள்ளூர சொல்லிக்கொண்டார். "நீங்கள் போய் சிரம பரிகாரம் செய்துகொள்ளுங்கள்" என்று அந்தணர்களுக்குக் கூறினார். அந்தணர் ஸ்வாமியை வணங்கிச்சென்றனர்.

அவர்கள் சென்றதும் ஆண்டாள் மடத்துக்கதவைச் சாத்திக்கொண்டு வந்தார். ''ஆண்டாள்! இதை பத்திரமாக வை'' என்றார் உடையவர்.

ஆண்டாள் ஏதும் பேசாமல் சிலம்பை வாங்கிக்கொண்டு சென்றாள். உடையவர் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. ஆனால் வில்லிதாசன் இதழ்களில் புன்முறுவலுக்கு இடமில்லை. துன்பம் குடிகொண்டிருந்தது.

குடிசைக்குள் நுழைந்த வில்லிதாசனை பொன்னாச்சி வழக்கம்போல் புன்முறுவலுடன் வரவேற்கவில்லை. துன்பம் தோய்ந்த முகத்துடன் கட்டிலில் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவள் துயரத்துக்குக் காரணம் தெரியாத வில்லி அவளை அணுகி அவள் தோள்மீது கையை வைத்தான். இன்னொரு கையால் அவள் முகத்தை நிமிர்த்தினான். கமல முகத்தில் ஒளிர்ந்திருந்த இரு நீலோத்பலங்களில் துயரம் படர்ந்திருந்தது.

வில்லி கேட்டான் ''என்ன ஹேமா! என்ன நடந்தது?'' என்று.

''மடத்திலிருந்து இரு அந்தணர்கள் வந்தார்கள்...'';

''உம்''

''என் சிலம்புகளை எடுக்க முயன்றார்கள்''

''உம்''

''ஒருக்களித்துப்படுத்திருந்தால் ஒரு சிலம்பைத்தான் எடுக்கமுடிந்தது அவர்களால். இன்னொரு சிலம்பையும் கழற்றட்டுமென்று காலை சிறிது நகர்த்தினேன்...''

''சொல் மேலே'' வில்லிதாஸன் குரலில் கடுமை தட்டியிருந்தது.

''நான் விழித்துக் கொண்டதாக நினைத்து ஓடிவிட்டார்கள்'' இந்த சமயத்தில் அவன் பெருமூச்சு விட்டான் சோகத்தால்.

வில்லிதாஸன் அவள் தோளிலும் முகவாய்க் கட்டையிலும் வைத்திருந்த தனது இருகைகளையும் விலக்கி சற்று தள்ளி நின்று கொண்டான். கனல்கக்கும்கண்களால் பொன்னாச்சியை நோக்கி ''அடி பாவி! என்ன அபசாரம் செய்துவிட்டாய்! பாகவதர்கள் வந்தார்களென்று தெரிந்தவுடன் நீ எழுந்திருந்து அவர்களை வணங்கி, வேண்டுவதென்ன என்று கேட்டு சிலம்புகளை நீயாகக் கழற்றிக் கொடுத்திருக்கவேண்டியிருக்க, அவர்களைத் திருடர்களாக்கினாய் வந்த காரியம் முடியாமல் அவர்கள் ஓட வகைசெய்தாய். இதைவிட பாகவத அபசாரம் என்ன இருக்கிறது? இனி என்முகத்தில் நீ விழிக்காதே'' என்று சீறிய வில்லிதாஸன் தரையில் மேல்துண்டை விரித்துப் படுத்தான்.

''ஸ்வாமி! ஆகாரம் செய்யவில்லையே'' என்று ஏக்கத்துடன் வேண்டினாள் பொன்னாச்சி

''உன் கையால் சாப்பிடுவதும் பாவம். உன்னுடன் பேசுவதும் பாவம், உன்னைப்பார்ப்பதும் பாவம்'' என்று மீண்டும் சீறிய வில்லிதாஸன் கண்களை மூடினான்

காவிரிக்கரையில் அவனைக்கவர்ந்த கண்கள் அன்று கவர சக்தியற்றதாயின துக்கத்தால், அவன் கூறிய சுடுசொற்களால் பொன்னாச்சியின் கண்கள் கலங்கின. அவற்றிலிருந்து உஷ்ணமான நீர்த்துளிகள் அவள் அழகிய கபோலத்தில வழிந்து ஓடின.

(அடுத்த இதழில் முடியும்)

# எம்பெருமானும்,
# எம்பெருமானாரும்

"எம்பெருமானும், எம்பெருமானாரும்" என்று மகுடமிட்டு, **கீதாசார்யன் 32**வது இதழில் வெளிவந்த அடியேனுடைய கட்டுரையைப் பற்றி; **திருப்பத்தூர் திரு. கா. அ. காளியப்ப இராமானுச தாசர்** 33வது இதழில் தெரிவித்தருளிய மூன்று மாற்றங்களுக்கு அடியேன் செய்யும் விண்ணப்பமே!

**அடியேன் கட்டுரைக் கருத்து (1)**

"மதுராந்தகத்தில் ஏரிகாத்த பெருமான் கோவிலண்டை பெரிய நம்பிகளிடம் உடையவர் ஆச்ரயித்து துவய மந்திரம் கற்றார்."

---

வழக்கறிஞர் திரு நா. வேணுகோபால
**நாயக்கரின் விளக்கம்**

---

**திரு காளியப்ப ராமானுஜ தாசர் கூறும் மாற்றம்**

"இதன் உண்மை திருமந்திரம், துவயம், சரமச்லோகம் மூன்றும்தான் சம்ப்ரதாயப்படி நடப்பது".

**அடியேன் கருத்துக்கு ஆதாரம்**

**(1) ஸ்ரீநம்பிள்ளைகள் திருவடிகளாகிய பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய திருவாறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம்**

(பெரிய) நம்பிகளும்.........பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளா நிற்கச் செய்தே ஸ்ரீ மதுராந்தகத்திலே ஏரி

காத்த பெருமாள் கோயிலிலே எழுந்தருளியிருந்த அளவிலே இளையாழ்வாரும்......கோயிலுக்கு எழுந்தருளா நிற்க மதுராந்தகம்வழியாகையாலே, இவரும் அங்கு ஏரி காத்தபெருமாளை வணங்குவதற்காக எழுந்தருள..... இவரை ஏரிகாத்த பெருமாள் திரு மகிழமடியிலே எழுந் தருளியிருந்தி...திரு இலச்சினை பிரசாதித்து .....பெரியநம்பி களும் இளையாழ்வாரைத் தம்முடைய வலப்புறத்திலே வைத்துத் தம் திருக்கைகளாலே அவர் தலையை ஸ்பர்சித்துக் கொண்டு ஸதாசார்யரான ஆளவந்தார் திருவடிகளை வணங்கிக்கொண்டு குருபரம்பரை பூர்வமாக **மந்திர ரத்தின மான 'த்வயத்தை'** பயபக்தியுடனே இளையாழ்வாருடைய வலது திருச்செவியிலே உபதேசித்தருளி ....அநுக்கிரகம் செய்து அருளினார்.

**(2) ஏரிகாத்த பெருமாள் தல வரலாறு : ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி தேவஸ்தானத்தார் வெளியீடு**

ஸ்ரீஎம்பெருமானார் இவ்விடத்தில் "த்வய" மந்திர உபதேசம் பெற்ற காரணத்தினால் இத்தலத்திற்கு **"த்வயம் விளைந்த திருப்பதி"** என்ற சம்பிரதாயப் பெயர் விளங்கு கின்றது. (மற்றும் பலவிடங்களும் காண்க)

**அடியேன் கட்டுரைக் கருத்து (2)**

"பெரியதிருமந்திரம் ஓம் நமோ நாராயணாய என்பதின் உட்பொருளைக் கற்க திருக்கோட்டியூர் நம்பிகளிடம் 17+1 ஆக 18 தடவை சென்று உட்பொருளை அறிந்தார்."

**திரு. காளியப்ப ராமானுஜதாசர் கூறும் மாற்றம்**

இதன் உண்மை—உடையவர் திருக்கோட்டியூர் நம்பி களிடம் தெரிந்து கொண்டது சரமச்லோகத்தின் உட்பொருளே.

அடியேன் கருத்துக்கு ஆதாரம்

ஸ்ரீராமானுஜன்—இதழ் 335-மே, 1976 ("ஆசிரியர் P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி") பகவத் ராமானுஜ திவ்யவைபவம்

பக்கம் : 24

(திருக்கோட்டியூர்) "நம்பிகள் நியமித்தருளி, அங்ஙனே சபதமும் பெற்று சரமச்லோகத்தின் பரம ரஹஸ்யார்த்த விசேஷங்களைப் பேரருள் கொண்டு உபதேசித் தருளினார்."

பக்கம் : 25

"இங்கே ஒரு ஆராய்ச்சி—உடையவருக்குத் திருக்கோட்டியூர் நம்பி உபதேசித்தது **திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்தின் பொருளென்று** ஆறாயிரப்படி **குருபரம்பரா ப்ரபாவத்தில் காண்கிறது.**

பக்கம் 26

"ஸ்வாமி திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிலே சரமச்லோகார்த்தம் கேட்ட போது ஆழ்வானுமாண்டானும் தண்டும் பவித்ரமுமாக உடனிருந்து கேட்டதாகவே இங்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இவ்விடத்து வரலாறு **குருபரம்பராப்ரபாவத்தோடு சிறிது மாறுபடுவதால் அதில் காண்கிற படியாகவும் இங்கு எழுதப்படுகிறது".** "ஸ்வாமி தண்டும் பவித்ரமுமாக இவ்விருவருடனேயிருந்து **நம்பி பக்கலிலே கேட்டது திருமந்த்ரப் பொருள் என்று வைத்துக் கொள்ளுவது.** பிறகு அவருக்கு சரம ச்லோகார்த்தத்தையும் உபதேசித் தருளத் திருவுள்ளம் கொண்ட நம்பிகள் "இப்போது கோயிலுக்குச் சென்று பின்பு ஏகாந்தமாக நீர் ஒருவருமே வாரும்" என்றருளிச் செய்ய, அப்படியே ஸ்வாமி கோயிலேற எழுந்தருளி **மீண்டுமொருகால் தனித்து நம்பிகளின் ஸ்ரீபாதத்-**

திலே தெண்டனிட்டு நிற்க நம்பிகளும்...நிர்ஹேதுக க்ருபையாலே பரம ரஹஸ்யமான சரமச்லோகப் பொருளை யருளிச் செய்து......

## அடியேன் கட்டுரைக் கருத்து (3)

வதரியாச்ரமத்தில் எம்பெருமான் திருமந்திரத்தை நரனாகவும் நாராயணனாகவும், ஒரு நரன் (மனிதன்) கிடையாமையாலே தன்னையே இரு கூறாக ஆக்கிக்கொண்டு திருமந்திரத்தை வெளியிட்டருளினான்.

## திரு காளியப்ப ராமானுஜ தாசர் கூறும் மாற்றம்

இதன் உண்மை—முமுட்சுப்படியில்—தானே சிஷ்யனும் நின்றது சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டார் அறியாமையாலே—அத்தை அறிவிக்கைக்காக என்றுளது.

## அடியேன் கருத்துக்கு ஆதாரம்

முமுட்சுப்படி ஸாரார்த்த தீபிகை (ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்) திருமந்த்ரப்ரகரணம்—பக்கம் 7

அதனால், 'இந்த ஸம்ஸாரிகள் நம்மையறிந்து பிறவிக் கடலைக் கடந்து அக்கரை படவேணும்'' என்று சிந்தை கொண்டான். அதனால், 'நரநாராயணனாய் உலகத்து அற நூல் சிங்காமை வித்தவன்' என்கிறபடியே நரநாராயண ரூபேண இரண்டு படியாக அவதரித்து நரனை தான் சிஷ்யனுமாய், நாராயணனை தான் ஆசார்யனுமாய் நின்று, ஸகலசாஸ்திர ஸங்கிரகமாயும் அர்த்த பஞ்சகத்தை ஸ்பஷ்டமாகக் காட்டுமதாயுமுள்ள திருமந்திரத்தை வெளியிட்டருளினான்.

**கட்டுரையில் அடியேன் விண்ணப்பம் (3)**

''திருமந்திரத்தை வெளியிடவேண்டிய அவசியம் நேர்ந்தால் ஆசாரியனாக மாத்திரம் நின்று வெளியிட்டால் போராதோ? தானே சிஷ்யனாகவும் ஒரு கோலம் பூண வேணுமோ என்னில், சிஷ்யனிருக்க வேண்டிய இருப்பை உலகத்தார் அறியாமையாலே அந்த **சிஷ்ய லட்சணத்தை** தன்னுடைய அனுட்டான முகத்தாலே அறிவிக்க வேண்டிய சிஷ்யனுமாய்க் கொண்டு நின்றது......

''தன்னையே உபதேசிக்கும் ஆசாரியனாகவும், அதனைச் செவியேற்கும் நர நாராயணனாகவும் இரண்டு கூறுகளாக நியமித்துக் கொண்டு வெளியிட்டருளினான். 'அந்த சிஷ்ய லட்சணத்தை சிஷ்யனிருக்க வேண்டிய விதத்தை அறிந்து'') கேட்பதற்கு ஒரு நரன் (மனிதன்) கிடைக்காத நிலையிலே! இந்த வாக்கியம் விளக்கும் வாக்கியமே.

ஸ்ரீவைணவத் தொண்டும், புலமையும் **எவரிடமும்** காணப்படினும், ஆசிப்பிருதுகள் வழங்குவதிலும், **வள்ளல்** பெரும்பசு வான நமது **சுசடறக் கற்ற காஞ்சிப் பெரியோரான** ஸ்ரீ அண்ணங்கராசாரிய சுவாமிகள் தம் கருணைக் கடுப்பாலே தரைக்குச் சமமான அடியேன் மீதும் பீச்சியுள்ள அடை மொழிகள், பல்கலைக் கழகத்தில் பெற்ற பட்டங்களிலும் மேலானவை!

குருபரம்பராப்ரபாவத்தையும், எம்பெருமானாரின் வைபவத்தையும், அடிப்படையாகக் கொண்டு, தற்காலத் தலைமுறையினர் ரசிக்கும் வண்ணம்; எழுத்தையும், நடையையும், பாணியையும் கையாண்டு விண்ணப்பிப்பதே அடியேனது கட்டுரையின் நோக்கம். நமது ஸ்ரீதாசார்யனின் நோக்கமும் இது தானே! இதுவே ஸ்ரீவைணவர்களின் தலையாய கடன். ஸ்ரீவைணவ சம்பந்தத்தைப் பிரசாரப் படுத்தத் திட்டப்படும் கட்டுரைகளில், விவரங்களைச் சரியாக வெளியிட வேண்டுமென அவாவும், **நமது திருகாளியப்ப இராமாநுச தாசரின்** திருவடிகளில் அஞ்சலி. ★

# ஸ்ரீமத் பகவத் கீதை

## இரண்டாம் அத்யாயம்

**நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி நைநம் தஹதி பாவக:**
**நசைநம் க்லேதயந்த்யாபோ நஶோஷயதி மாருத: 23**

**அச்சேத்யோ: யமதாஹ்யோ: யமக்லேத்யோ: ஶோஷ்ய ஏவச**
**நித்யஸ் ஸர்வகத: ஸ்த்தாணு ரசலோ: யம் ஸநாதந: 24**

இவனை ஆயுதங்கள் துண்டிக்கின்றனவில்லை; இவனை நெருப்பு கொளுத்துகிறதில்லை; இவனை நீர் நனைக்கிறதில்லை; காற்று உலர்த்துகிறதில்லை; இவன் துண்டித்தற்கு உரியனாகான்; இவன் கொளுத்தப்படான், நனைக்கப்படான்; உலர்த்தப்படாதவனே, எல்லாப் பொருள்களிலும் புக்கிருக்குந் தன்மையன்; அழிவில்லாதவன்; ஸ்திரமானவன்; சலிப்பிக்கப்படாதவன்; இவன் பழமையானவன் என்பதாம்.

''அவிநாஶீ'' என்று முற்கூறிய அழிவில்லாத் தன்மையை நன்கு அறிந்து கொள்ளுதற் பொருட்டு, இதில் மறுபடியும் அழிவிலாத் தன்மையைக் கூறி, அதனைத் திடமாக்குகின்றான் என்பது கருத்து.

ஆத்மா, எல்லாப் பொருள்களிலும் வ்யாபித்திருக்குந் தன்மையன்; ஆதலால், மிக நுண்ணிய பொருளானவன்; பிற பொருள்கள் அவனில் வ்யாபித்து அழிக்குந் தன்மையனவல்ல; எனவே, அவன், துண்டிக்கப்படல், கொளுத்தப்படல், நனைக்கப்படல், உலர்த்தப்படல் ஆகியவற்றிற்கு உரியனாகான் என்கிறான். நித்ய: என்பது அழிவில்லாதவன் என்பதைக் காட்டுகின்றது. ஆதலால் ஸநாதந: என்பது பழமையானவன் என்பதை உணர்த்துகிறது. ஸ்த்தாணு: அசல: என்பன நித்ய: என்றதை விவரிக்கின்றன; அன்றி, இயல்பாகவும் காரணம் பற்றியும் வருகின்ற நுண்ணிய மாறுதல்களில்லாதவன் என்பதை உணர்த்துகின்றன எனலாம்.